# வானவில்

# VAANAVIL

இதழ் 152 ஆவணி 2023

ISSUE 152 AUGUST 2023


# இடதுசாரி இயக்கம் வடக்கு கிழக்கில் மீண்டும் புத்துயிர் பெறுமா?

இந்தக் கேள்வி இலங்கையிலுள்ள பல முற்போக்காளர்களால் கடந்த சில வருடங்களாக அடிக்கடி கேட்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் போர் முடிவுற்று சுமார் 14 வருடங்கள் ஆகிவிட்ட போதிலும், இலங்கையின் பிரதான இடதுசாரி இயக்கங்கள் எதுவும் தமிழ் – முஸ்லீம் சிறுபான்மை இனங்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எதனையும் ஆரம்பிக்காமல் இருப்பதுதான்.



ஒரு காலத்தில் குறிப்பாக தமிழ் மக்கள் அதிகமாக வாழும் வட பகுதியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சோவியத் சார்பு), இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீன சார்பு), லங்கா சமசமாஜக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி (விக்கிரமபாகு கருணரத்ன), புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி (பாலாதம்பு), புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (கீர்த்தி பாலசூரியா) என்பன தீவிரமாகச் செயல்பட்டதுடன், தமது அலுவலகங்களையும் தொழிற்சங்கங்களையும் கூட வைத்திருந்தன.

குறிப்பாக நா.சண்முகதாசனை பொதுச்செயலாளராகக் கொண்டு செயல்பட்ட சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி வடக்கில் பல தொழிற்சங்கங்களை மட்டுமின்றி, விவசாயிகள் சங்கங்களையும், துடிப்புமிக்க வாலிபர் இயக்கங்களையும் வைத்திருந்தது. கலை இலக்கியத்துறையிலும் பல செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கில் நிலவிய தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும், சாதியமைப்புக்கு எதிராகவும் 1960 களில் பல புரட்சிகரமான போராட்டங்களை நடத்தி குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் பெற்றிருந்தது.

இரண்டு பிரதான தமிழ் கட்சிகளான தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளுக்கு சவால் விடும் அளவுக்கு இடதுசாரி கட்சிகளின், குறிப்பாக கம்யூனிஸ்ட் மற்றும் சமசமாஜ கட்சிகளின் பலம் வடக்கில் இருந்தது.

ஆனால் 70 களில் வடக்கில் இடதுசாரிக் கட்சிகளுக்கு இரண்டு விதங்களில் பின்னடைவு ஏற்பட்டது. 70 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மக்கள் முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமோக வெற்றியீட்டிப் பதவிக்கு வந்தது. அதேநேரத்தில் வடக்கில் இருந்த பிரதான தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கியதுடன், 'தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம்' என்ற பெயரில் வன்முறை கலந்த அரச எதிர்ப்புப் போராட்டங்களையும் வடக்கு கிழக்கில் ஆரம்பித்தன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சிறீமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தில் இணைந்திருந்த சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் வடக்கு கிழக்கில் நிலவிய தீவிர அரச எதிர்ப்புக் காரணமாக அந்தப் பகுதிகளில் செயல்பட முடியாத ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்தன.

அதேநேரத்தில் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி தீவிர அரச எதிர்ப்பு நிலையை எடுத்தது. "யூ.என்.பி. ஆண்டாலும் சிறீலங்கா ஆண்டாலும் ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே" என்பது அவர்களது நிலையாக இருந்தது. இந்த நிலைப்பாடு கட்சி முன்னர் எடுத்திருந்த இலங்கை முதலாளித்துவம் தரகு முதலாளித்துவம் (ஐ.தே.க. தலைமையில்), தேசிய முதலாளித்துவம் (சிறீலங்கா சுதந்திரக் கட்சி

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# பாகிஸ்தானில் தொடரும் இராணுவ ஆட்சி

ஓகஸ்ட் 5ஆ திகதி ஊழல் வழக்கொன்றில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு இஸ்லாமாபாத் விசாரணை நீதிமன்றம் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இதனையடுத்து இம்ரான் கான் உடனடியாகவே கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். மேலும், இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அவர் எவ்வித தேர்தலிலும் போட்டியிட இயலாத வண்ணம் தகுதியியையும் இழந்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கான், 1996 இல் தெஹ்ரீக் இ–இன்சாஃப் (PTI – பாகிஸ்தான் நீதிக் கட்சி) கட்சியைத் தொடங்கி, 2018 பொதுத் தேர்தலில் வென்று, பாகிஸ்தானின் 22வது பிரதமராகப் பதவியேற்றார். அவரது தலைமையிலான கூட்டணியிலிருந்து விலகிய முக்கியக் கட்சி ஒன்று, எதிர்க்கட்சியுடன் இணைந்தது. இதனால் பாராளுமன்றத்தில் இம்ரான் கானுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதைத் தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகினார். பின்னர் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃப்பின் தம்பி, ஷெபாஸ் ஷெரீஃப் பிரதமராக பொறுப்பேற்றார்.

இம்ரான் கைது செய்யப்படுவது, கடந்த மூன்று மாதங்களில் இது இரண்டாவது முறையாகும். பதவி இழப்புக்குப் பின்னர், அவர் மீது ஊழல், மோசடி, கொலை மிரட்டல் என 100 இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவ்வாறான வழக்கொன்றில் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஂரா பீவிக்குச் சொந்தமான காதிர் அறக்கட்டளை மூலம் 5,000 கோடி இந்திய ரூபா ஊழல் மோசடி செய்யப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டது. அந்த வழக்கில் இம்ரான்கானை கைது செய்ய ஊழல் தடுப்பு ஆணையம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர் கடந்த மே மாதம் 9ஆ திகதி கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரை இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது அவர் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களின் போது வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள், விலையுயர்ந்த பொருட்களை விற்று கிடைத்த பணத்தை மோசடி செய்ததாகவும் ஒரு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை இஸ்லாமாபாத் விசாரணை நீதிமன்றம் விசாரித்து வந்தது. இம்ரான் கான் குற்றவாளி என்று உறுதி செய்த நீதிமன்றம் இப்போது அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் முரண்பாடுகள் நிறைந்த ஒரு வித்தியாசமான ஆளுமை. அவரது கிரிக்கெட் நாட்களிலிருந்து, பாகிஸ்தான் பிரதமரின் அரியாசனத்தில் அமர்ந்தது வரையான அவரது பயணம் பல சர்ச்சைகள் நிறைந்ததாகவே இருந்தன. மேலும் பாகிஸ்தான் பிரதமர் பதவி என்பது பஞ்சு மெத்தை அல்ல!

கடந்த 75 ஆண்டுகளாகத் தொடரும் இராணுவ ஆட்சி, பொருளாதாரா நெருக்கடி, ஊழல்கள், உள்நாட்டு பயங்கரவாத அச்சுறுத்தல். சுதந்திமடைந்த காலத்திலிருந்து இந்தியாவுடனான எல்லைப் பிணக்குகள், பூகோள அரசியலில் நாட்டின் வகிபாகம் என கடுமையான சவால்களை பாகிஸ்தான் சந்தித்து வருகின்றது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்கள் கைது செய்யப்படுவது புதிய விடயமல்ல. இந்தக் கைதுப் படலம் 1950களிலேயே தொடங்கிவிட்டது. இராணுவத்துடன் முரண்படுபவர்கள் இந்த கதியைத்தான் சந்திக்க நேரிட்டு வருகின்றது. 1957 இல் வங்காளத்தை (இப்போதைய பங்களாதேஸ்) சேர்ந்த ஹூசைன் ஷஹீத் சுஹ்ராவர்தி, 1977 இல் சுல்பிகார் அலி பூட்டோ ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பின்னர், பூட்டோவின் மகள் பெனாசிர் பூட்டோ, நவாஸ் ஷெரீஃப் போன்றவர்கள் பல்வேறு வழக்குகளில் பலமுறை கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் சுல்பிகார் அலி பூட்டோ 1979 இல் தூக்கிலிடப்பட்டார். சிறையில் அடைக்கப்படுவதைத் தவிர்க்க பெனாசிரும், நவாஸூம் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தனர். 2007 ஆம் ஆண்டு நாடு திரும்பிய பெனாசிர், அதே ஆண்டு ஆண்டு கொல்லப்பட்டார். இதன் பின்னணியிலும் பாகிஸ்தான் இராணுவ உளவுத்துறையே இருப்பதாகக் கருதப்படுகின்றது.

இதேவேளையில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பதவியிலிருந்து அகற்றப்பட்டதில் அமெரிக்க உளவுத்துறைக்கு நேரடி சம்பந்தம் இருந்ததாக இம்ரான் கான் பல பேட்டிகளில் தெரிவித்ததோடு, பல ஆங்கில ஊடகங்களில் செய்திகளாகவும் வெளிவந்துள்ளன. உக்ரைன் மீதான ரஷ்யாவின் விசேட இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த 2022, பெப்ரவரி 22ஆ திகதி அன்று இரண்டு நாள் பயணமாக மொஸ்கோவை வந்தடைந்த இம்ரான் கான், பெப்ரவரி 23ஆ திகதி ரஷ்ய அதிபர் புட்டினை சந்தித்தார். இது இரண்டு தசாப்தங்களில் பாகிஸ்தான் பிரதமரின் முதலாவது ரஷ்யப் பயணம் ஆகும். ரஷ்யா – உக்ரைன் போருக்கு முன்பே இந்த விஜயம் திட்டமிடப்பட்டிருந்தாலும், இம்ரானின் விஜயம் அமெரிக்காவிற்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

தெற்காசியாவில் இந்தியாவின் பரம எதிரியாக இருக்கும் பாகிஸ்தான், அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையே வளர்ந்து வரும் மோதலில், வெளிப்படையாக பக்கம் எடுப்பதை அண்மைக் காலங்களில் தவிர்த்து வருகின்றது. பனிப்போர் காலத்திலிருந்தே அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன், அதன் இராணுவ மற்றும் உளவுத்துறை உறவுகளை இன்னும் பேணிவரும் அதே வேளையில், பல தசாப்தங்களாகவே பாகிஸ்தான் – சீனா உறவுகளும் நல்ல நிலையிலேயே உள்ளன.

அமெரிக்காவிடமிருந்து சீனா எதிர்கொள்ளும் பொதுவான அச்சுறுத்தலை முறியடிக்க, தற்போது சீனா ரஷ்யாவுடன் அதிகளவில் நெருக்கமாக வேலை செய்து வருகிறது. இந்தியா–அமெரிக்க கூட்டணி தற்போது நல்ல நிலையில் இருப்பதின் பிரதிபலிப்பாகவும், இம்ரான் கானின் ரஷ்ய விஜயத்தைத் தொடர்ந்தும், பாகிஸ்தான் மொஸ்கோவை நோக்கித் திரும்புவதற்கான தோற்றப்பாடு அதிகரித்திருந்தது. ஆனால் இம்ரானின் கைது அதற்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன், பாகிஸ்தானின் இராணுவம் மற்றும் உளவுத்துறை இன்னமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கிடுக்குப்பிடியில் சிக்கித் தவிப்பதை தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

இராணுவப் பிடியிலிருந்து முற்றுமுழுதாக விடுபட்டு, குறைந்தபட்ச முதலாளித்து ஜனநாயகப்பாதைக்கு திரும்புவதற்கான போராட்டமே பாகிஸ்தானில் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். இது ஒருவகையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமும் கூட.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com
'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# “அணுமின் நிலையம், பந்து இலங்கை வசமுள்ளது”

## -ரஷ்ய தூதர்



ரஷ்ய தூதர் லெவன் ஷாகர்யன் (Levan Dzhagaryan)

**இலங்கை–ரஷ்யா இருதரப்பு உறவுகள் மற்றும் உக்ரைனுடனான போர் குறித்த ரஷ்யாவின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பான பேட்டியொன்றில் டெய்லி மிரர்** (Daily Mirror) **பத்திரிகை இலங்கைக்கான ரஷ்ய தூதர் லெவன் ஷாகர்யன்** (Levan Dzhagaryan) **அவர்களிடம் கேள்விகளை எழுப்பியது. இந்தப் பேட்டியில் இலங்கையுடனான அணுசக்தி ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் ஏனைய விடயங்களையும் அவர் எடுத்துரைக்கிறார்:**

**கேள்வி:** ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான எரிசக்தித் துறை ஒத்துழைப்பு, குறிப்பாக அணுசக்தி அபிவிருத்தி குறித்து செய்திகள் உள்ளன. தற்போதைய நிலை என்ன?

**பதில்:** கடந்த ஆண்டு நான் இங்கு வந்தபோது இந்த திட்டத்தை முன்வைத்தேன். முதலில் எரிசக்தி அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சில் உள்ள எனது சகாக்கள் என சில உயர் அதிகாரிகளை சந்தித்தேன். நான் இங்கு வருவதற்கு முன்பு, ரோசரொமின் (Rosatom: Russian State–run Atomic Energy Corporation – ரஷ்ய அரசின் கீழுள்ள அணுசக்தி கூட்டுத்தாபனம்) உயர் அதிகாரிகளுடன் பேசினேன். முதலில் 55 மெகாவாட் (Megawatts) திறன் கொண்ட 2 தொகுதிகள் வீதம், 110 மெகாவாட் திறன் கொண்ட சிறிய அணுமின் நிலையத்தை அமைக்க வேண்டும் என்பது எனது எண்ணம். நிச்சயமாக, தொகுதிகளின் எண்ணிக்கையை இரண்டு, நான்கு அல்லது ஆறு ஆக அதிகரிக்கலாம். அது நிலைமையைப் பொறுத்தது. ஆனால், வெளிப்படையாகச் சொன்னால், இந்த மாதிரியான விபரங்களுக்குள் செல்ல எனக்கு அதிகாரம் இல்லை. விபரங்கள் நிபுணர்களால் கலந்துரையாடப்பட வேண்டும். அணுமின் நிலையம் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு வழிவகுப்பதே எனது வேலை.

நிலைமைகள், நிதி, தொழில்நுட்ப விடயங்கள் அல்லது உங்களுக்கு எந்த வகையான அணுமின் நிலையம் தேவை என்பதைப் பற்றி பேச ஆரம்பிப்பதற்கு ரஷ்ய தூதுக்குழு இங்கு வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அணுமின் நிலையம் தொடர்பாக எனது பரிந்துரைக்குப் பின்னர், உள்ளூர் ஊடகங்கள் மிகவும் சர்ச்சைக்குரிய கட்டுரைகளை – சார்பாகவும் எதிராகவும் – வெளியிட்டுள்ளன. இந்தக் கூட்டு ஒத்துழைப்பை சிலர் எதிர்க்கின்றனர். அவர்கள் யாருடைய நலன்களைப் பிரதிபலிக்கின்றார்கள் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். ஜப்பானின் ஃபுகுஷிமா (Fukushima), ரஷ்யாவின் செர்னோபில் (Chernobyl) அணுமின் நிலையம் என எதிர்மறையான அனுபவங்களையே அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். செர்னோபில் இப்போது ரஷ்யாவில் இல்லை, சோவியத்தின் உக்ரைனில் இருந்தது. பல நாடுகளுடனான எமது சர்வதேசக் கூட்டு ஒத்துழைப்பிற்கு எங்களிடம் சிறந்த எடுத்துக்காட்டுகள் உள்ளன. உதாரணமாக, உங்கள் அருகிலுள்ள அயல்நாடான இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலையம், பங்களாதேஷில் உள்ள ரூப்பூர் (Rooppur) அணுமின் நிலையம் மற்றும் துருக்கியிலும் ஈரானிலும் உள்ள அணுமின் நிலையங்கள். சமீபத்தில் சிறிய அணுமின் நிலையமொன்றினை அமைக்க மியான்மாருடன் மிக நல்லதொரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம். இப்போது பந்து உங்கள் வசமுள்ளது. இனி உங்களைப் பொறுத்தது. உங்களுக்கு தேவையிருந்தால், எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

**கேள்வி:** இலங்கையில் ஓர் அணு ஆலையை அமைப்பது நடைமுறையில் சாத்தியமா?

**பதில்:** நான் இந்த விடயத்தில் ஒரு விசேட நிபுணன் கிடையாது. இதனை நிபுணர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். நீங்கள் மின்சாரப் பற்றாக்குறைக்கு முகங்கொடுக்க முன்னர், நிலக்கரி அல்லது அனல் மின்சக்தியை மாத்திரம் தங்கியிருக்காமல், மாற்று மின்சார ஆதாரங்களை வைத்திருப்பது நல்லது. சூரிய சக்தி, காற்று மற்றும் பசுமை சக்தி இருப்பது மிகவும் முக்கியம், ஆனால் அவை நம்பகரமானவை அல்ல. காலநிலை மாற்றம் அதனது வேலையைச் செய்த வண்ணமுள்ளது. எனவே, மாற்று ஆதாரங்களைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியம்.

**கேள்வி:** ரஷ்ய நாணயத்துடனான சாத்தியமான பரிவர்த்தனைகள் குறித்து கலந்துரையாடல்கள் நடந்தன. அதற்கு இலங்கை மத்திய வங்கி உடன்படவில்லை. இது இருதரப்பு உறவுகளைப் பாதித்ததா?

**பதில்:** இல்லை. ரஷ்ய ரூபிளில் பரிவர்த்தனைகளைப் பற்றி நாங்கள் பேசவில்லை. மிர் (Mir) என்று அழைக்கப்படும் ரஷ்ய கட்டண முறை அட்டையை செயல்படுத்துவதற்கான

சாத்தியக்கூறுகள் குறித்து நாங்கள் உரையாடினோம். அதனை இலங்கை ஏற்கவில்லை. இந்த கட்டண முறையைப் பயன்படுத்திவரும் நாடுகளுக்கு அமெரிக்கர்கள் அழுத்தம் கொடுப்பதால், நாங்கள் அதனைப் புரிந்துகொள்கிறோம். இந்த கட்டண முறையைப் பயன்படுத்தும் நாடுகள் இரண்டாம் நிலை பொருளாதாரத் தடைகளுக்கு உட்படுத்தப்படும். இங்கு ஏராளமான ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையில் நாங்கள்தான் முதலிடத்தில் இருந்தோம். சுற்றுலாப்பயண காலம் முடிவடைந்துவிட்டதால், இப்போதைய நிலவரம் எனக்குத் தெரியாது. ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இங்கு வரும்போது சில சிக்கல்களையாவது எதிர்கொண்டதாக இதுவரை நாங்கள் கேள்விப்பட்டதில்லை. எப்படியோ அவர்களிடம் பணம் உள்ளது. அவர்களிடம் பிற நாட்டுக் கட்டண அட்டைகள் உள்ளன. எனவே, இது ஒரு பெரிய பிரச்சினை அல்ல. நீங்கள் அதனை (மிர்) ஏற்கத் தயாராக இல்லை என்றால், அது உங்கள் இறையாண்மை உரிமை. ஏனைய நாடுகளைப் போல நாங்கள் அழுத்தம் கொடுப்பதில்லை. உங்கள் முடிவுகளை நாங்கள் மதிக்கிறோம்.

**கேள்வி:** முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் இடம்பெற்றதைப் போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் சில உயர்மட்ட விஜயங்களுடன் கூடிய புதிய தொடர்பாடல்கள் இடம்பெறுமா?

**பதில்:** வெளிப்படையாகச் சொல்வதானால், தற்போது, உக்ரைனில் எங்கள் விசேட இராணுவ நடவடிக்கையில், நாங்கள் மிக மும்முரமாக இருக்கிறோம். எமது நடவடிக்கைகளை நாங்கள் வேறு திசைகளில் செலுத்துகிறோம் என்று இதனை அர்த்தப்படுத்திக் கொள்ளவேண்டாம். சமீபத்தில், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் (Sergey Lavrov) தென்னாப்பிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். ஓகஸ்டில், விடுமுறைக்காக நான் மொஸ்கோ செல்வதுடன், ஆலோசனைகள் மற்றும் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து வெளியுறவு அமைச்சகத்தில் உள்ள எனது சகாக்களிடம் கேட்பேன். எந்தவகையிலும் நட்பு நாடுகளின் அரசுகளுடன் ஒத்துழைக்க நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். நட்பு நாடுகள் என்பதை நான் அழுத்தமாகவே சொல்ல விரும்புகிறேன்! அதில் இலங்கையும் ஒன்று.
அரசாங்கத்துடனோ அல்லது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியிடமோ எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. திரு. விக்கிரமசிங்க மிகவும் மரியாதைக்குரிய ஜனாதிபதி. எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை.

**கேள்வி:** இலங்கை – ரஷ்யா இருதரப்பு வர்த்தக கொள்ளளவானது திறனை விட மிகவும் குறைவாக உள்ளது. முழுத்திறனையும் கட்டவிழ்த்து விடுவதைத் தடுப்பது எது?

**பதில்:** எங்களிடம் அரசுகளுக்கு இடையேயான பொருளாதார ஆணையம் உள்ளது. மெய்நிகர் வழியாக உரையாடல் நடத்தக்கூடிய திகதியைப் பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம். சமீபத்தில் இலங்கை தரப்பு ஜூலை மாதத்தை பரிந்துரைத்தது. உங்கள் தரப்பிலிருந்து வர்த்தக அமைச்சின் செயலாளர் திரு அத்தபத்து. எங்கள் தரப்பிலிருந்து, இது மீன்வளத்திற்கான கூட்டாட்சி நிறுவனம். இந்த இரு அமைப்புகளின் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பொன்றினை ஏற்பாடு செய்வதே எங்கள் பரிந்துரை. இங்குள்ள கடற்றொழில் துறையைச் சேர்ந்தவர் பெர்னாண்டோ. செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் (St Petersburg) பொருளாதார மன்றத்தில் கலந்து கொள்வதற்காக பெர்னாண்டோ ஜூன் மாதம் ரஷ்யா செல்ல திட்டமிட்டுள்ளார். இச்செய்தியை நான் மொஸ்கோவிடம் தெரிவித்தேன். பதிலுக்காக காத்திருக்கிறோம். கூட்டுப் பொருளாதார ஆணையத்தின் கூட்டத்தொடரை மெய்நிகர் முறையில் நடத்துவதற்கு இது சரியான நேரம். இது மிகவும் முக்கியமானது. கடந்த 2019 ஆம் ஆண்டு கூட்டத்தொடர் நடைபெற்றது.
(இந்தப் பேட்டி மே மாதத்தில் எடுக்கப்பட்டது)

**கேள்வி:** ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்யும் திட்டமொன்றினை இலங்கைத் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டது. ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதுவர் சில நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இதில் என்ன முன்னேற்றம்?

**பதில்:** இது ஒரு தனியார்துறை வணிகம். நிலக்கரி அல்லது பிற பொருட்களுக்காக இங்குள்ள அவர்களது தனியார்துறை கூட்டாளிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்போது, அவர்கள் சில நேரங்களில் தூதரகத்திற்கு தகவல்களை தெரிவிப்பதில்லை. இது ஒரு தனியார்துறை வணிகம் என்பதால் நாங்களும் அதில் தலையிடுவதில்லை.

**கேள்வி:** ஆனால், எண்ணெய் வர்த்தகம் சில சந்தர்ப்பங்களில் மூலோபாய கூறொன்றினைக் கொண்டுள்ளது. பின்னர், அதில் இராஜதந்திர தலையீடும் உள்ளது. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

**பதில்:** அவர்கள் எங்களிடம் தெரிவிக்காததால், நாங்கள் தனியார்துறை நிறுவனங்களிடம் கேள்விகள் கேட்பதில்லை. ரோசாட்டம் போன்ற அரசுசார் அமைப்புகளால் முன்மொழியப்பட்ட விவகாரங்களை மாத்திரமே நான் பின்பற்றுகிறேன்.

**கேள்வி:** ரஷ்யாவுடனான எண்ணெய் வர்த்தகத்தின் இலாபம் பற்றி ஒரு தூதராக நீங்கள் எங்களுக்கு என்ன சொல்ல முடியும்?

**பதில்:** ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகள் இருந்தபோதிலும், பல நாடுகள் தொடர்ந்து எண்ணெய் வாங்குவதால் இது இலாபகரமானது. அவர்கள் ரஷ்ய கூட்டமைப்பிலிருந்து கொள்முதல்களை அதிகரிக்கிறார்கள். இந்தியா, சீனா மற்றும் சில நாடுகளுக்கு, இது ஒரு பிரச்சினை அல்ல. இந்த தடைகள் பலனளிக்காது.

**கேள்வி:** இந்தியாவுடன், நீங்கள் நிறைய எண்ணெய் வணிகம் செய்கிறீர்களா?

**பதில்:** ஓமோம், நாங்கள் அதை மகிழ்ச்சியுடன் செய்கிறோம். எங்கள் இந்திய நண்பர்களுக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். பொருளாதாரத் தடைகளை மீறி, அவர்கள் ரஷ்ய எண்ணெயை வாங்குகிறார்கள். இது இரு நாடுகளுக்கும் இலாபகரமானது.

**கேள்வி:** இலங்கையின் போர்க்கால கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடா (Wasantha Karannagoda) மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. நீங்கள் பகிரங்கமாக அதனை விமர்சித்திருந்தீர்கள். இதைச் செய்ய உங்களைத் தூண்டியது எது?

**பதில்:** நான் அதனை களிப்புடன் செய்தேன். சுதந்திரமான நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில்

தலையிடுவதற்கான அனைத்து வகையான முயற்சிகளையும் நாங்கள் கண்டிக்கின்றோம் என்பதால், நான் அதனை விமர்சனம் செய்தேன். இலங்கை ஒரு சுதந்திரமான நாடு. என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று கூறி ஏனைய நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்காவும் வேறு சில மேற்கத்திய நாடுகளும் விரும்புகின்றன. அவர்களது இரட்டை நிலைப்பாட்டினை நாங்கள் விமர்சித்து வருகின்றோம். திரு கரன்னாகொட உட்பட எவரையும் விமர்சிக்க அவர்களுக்கு உரிமை இல்லை என்பதே எனது செய்தியாக இருந்தது. கரன்னாகொடவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்துள்ளது. அவர் எனக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்து இருந்தார். அது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தடைகள் சட்டத்திற்கு விரோதமானவை.

**கேள்வி:** உக்ரைன் உடனான ரஷ்ய போர் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. ரஷ்யாவால் எவ்வளவு காலம் அதனைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்?

**பதில்: எமது** ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் எங்களிடம் உள்ளன. அது உக்ரைனின் நாசிமயமாக்கலையும் இராணுவமயமாக்கலையும் இல்லாதொழிப்பதாகும். அத்துடன் உக்ரைன் நடுநிலையாகவும் எந்தவொரு அணியிலும் தன்னை இணைத்துக்கொள்ளாது பார்த்துக்கொள்ள வேண்டும். உக்ரைனில் ஒரு பாசிச, பயங்கரவாத ஆட்சியுள்ளது. உக்ரைன் நேட்டோவில் சேரக்கூடாது, எங்களை அச்சுறுத்தக் கூடாது அத்துடன் எங்களுக்கு பிரச்சினைகளை உருவாக்கக் கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம். புதிய பிராந்தியங்கள் ரஷ்யாவின் பகுதிகள் என்பதை அவர்கள் கட்டாயமாக ஒப்புக் கொள்ள வேண்டும். அவை வரலாற்று ரீதியாக ரஷ்யாவைச் சேர்ந்தவை.

**கேள்வி:** சீனா தலையிட்டுள்ள நிலையில், போரை முடிவுக்குக் கொண்டு வர இப்போது ஏதேனும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதா?

**பதில்:** சீனா இப்போதுதான் தூதர் ஒருவரை நியமித்துள்ளது. உக்ரைனுக்கு அவர் பயணம் மேற்கொள்ள இருக்கிறார். நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளர், ஜேர்மனியின் அதிபர் மற்றும் இங்கிலாந்தின் பிரதமர் ரிஷி சுனக் உட்பட ஐரோப்பாவின் உயர்மட்ட அதிகாரிகள் ரஷ்யாவைத் தோற்கடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பேசுவதில்லை. உக்ரைனிலுள்ள ஆட்சி அவர்களின் கைப்பொம்மையாக உள்ளது. பொம்மை சுதந்திரமாக இருக்க முடியாது. பொம்மை எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாது. பொம்மைகளுடன் எப்படி நாங்கள் பேச்சுவார்த்தை நடத்த முடியும்?

கடந்த ஆண்டு துருக்கி நாட்டுத் தலைநகரான இஸ்தான்புல்லில் (Istanbul) நல்லதொரு வாய்ப்பு இருந்தது. அவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால், பேச்சுவார்த்தையை நிறுத்துமாறு உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஷெலென்ஸ்கியிடம் (Volodymyr Zelensky) பிரிட்டிஷ் அரசு கூறியது.

**கேள்வி:** போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பந்து அவர்கள் வசம் இருக்கின்றது என்று சொல்ல வருகிறீர்களா?

**பதில்:** ஓம் நிச்சயமாக. ஆனால், அவர்கள் உக்ரைனுக்கு ஆயுதங்களாக இறைத்து வருகின்றனர். உக்ரைன் இப்போது பணத்திற்காக ஐரோப்பாவைக் கெஞ்சிய வண்ணமுள்ளது.

**கேள்வி:** போரை ஆரம்பித்தது ரஷ்யாதானா?

**பதில்:** எங்கள் பாதுகாப்பிற்கான உத்தரவாதத்தினைக் கேட்டோம். நாங்கள் விசேட இராணுவ நடவடிக்கையைத் தொடங்காமல் இருந்திருந்தால், உக்ரைனிலுள்ள ரஷ்யர்களைப் படுகொலை செய்வதற்கான முழு அளவிலான போரை அவர்கள் தொடங்கியிருப்பார்கள்.

கடந்த 2014 ஆம் ஆண்டு உக்ரைனில் நடந்த சட்டவிரோத ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு அவர்களால் போர் தொடுக்கப்பட்டது. ஆங்கிலோ–சக்சன்களால் (Anglo-Saxons) எழுச்சி ஊட்டப்பட்டார்கள். இந்த கவிழ்ப்புக்குப் பிறகு நாசிகள் எங்கள் அண்டை நாட்டில் ஆட்சிக்கு வந்தனர். உக்ரைன் மக்களை நாங்கள் எங்கள் சகோதரர்களாகவே மதித்து வந்துள்ளோம். எனது ஜனாதிபதி கூறியது போல, உண்மையில், நாங்கள் ஒரே மக்களாக இருக்கின்றோம்.

2014 முதல் கீவ்வின் (Kiev) இராணுவக்குழு பிராந்தியங்களில் பலவித இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கியது, இந்தப் பிராந்தியங்கள் தங்கள் தலைநகரில் உக்ரைனின் புதிய நாசி ஒழுங்கை ஏற்றுக்கொள்ளாதவை. ஒடெசாவில் (Odessa), தொழிற்சங்கங்களின் சபையில் டசின் கணக்கான எதிர்ப்பாளர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். ஷாப்போரிஷியாவில் (Zaporizhzhia), நாசிகள் அதிருப்தியாளர்கள் மீது குற்றம் சாட்டியதோடு, தடுத்தல் முறையைப் பயன்படுத்தி அவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு வலியுறுத்தினர். டொன்பாஸில் (Donbas), மக்கள் நாசிக்களை வெற்றிகரமாக எதிர்த்தனர். ஆனால் கீவ் படைகளால் நடத்தப்பட்ட மக்கள் மீதான பல மிருகத்தனமான, மனிதாபிமானமற்ற குண்டுவெடிப்புகள், சட்டத்திற்குப் புறம்பான தண்டனைகள், முழு உக்ரைன் நிறுவப்படுவதற்கு முன்பே அங்கு வாழ்ந்து வந்த ரஷ்யர்களை அழிக்க முயன்ற நாசிக்களின் கொள்ளை அலைகள் மற்றும் பாலியல் பலாத்காரங்கள் ஆகியவற்றை இதற்கு விலையாக கொடுக்க வேண்டியிருந்தது.



2022 இல் உக்ரைன் நேட்டோவில் இணையலாம் என்பது யதார்த்த நிலவரமாக இருந்தது. உக்ரைன் நேட்டோ கூட்டணியின் ஒரு பகுதியாக மாறிய பின்னர், மேற்கத்திய அணு ஆயுதங்கள் அந்த பிராந்தியத்தில் நிலை நிறுத்தப்படலாம். அதன் பின்னர் உக்ரைன், ரஷ்ய கூட்டமைப்பிற்கு எதிரான ஆக்கிரமிப்பினை நிலை நிறுத்தப்பட்டுள்ள அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்துவதன் மூலம் தொடங்குவார்கள்.

அதனால்தான், பெப்ரவரி 24, 2022 அன்று, உக்ரைனின் நடுநிலை

அந்தஸ்தை உறுதிப்படுத்தவதோடு, உக்ரைனிலிருந்து நாசிமயமாக்கலையும் இராணுவமயமாக்கலையும் அகற்றவும் விசேட இராணுவ நடவடிக்கையைத் தொடங்கினோம்.

**கேள்வி:** நீங்கள் தொடர்ந்து போராடத் தயாராக இருக்கிறீர்கள் என்று இதன் அர்த்தமா?

**பதில்:** அவர்கள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இல்லை, தொடர்ந்து சண்டை செய்ய விரும்பினால், நாங்களும் சண்டையைத் தொடர்வோம்.

**கேள்வி:** இது இலங்கையுடனான பொருளாதார உறவுகளை எவ்வாறு பாதித்துள்ளது?

**பதில்:** எந்த பாதிப்பும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. உங்களின் நடுநிலையான நிலைப்பாட்டிற்காக இலங்கைக்கு பல தடவைகள் நான் நன்றியைத் தெரிவித்துள்ளேன். நீங்கள் அழுத்தத்தில் இருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். எங்களைப் பொறுத்தவரை, இலங்கை, அதன் நடுநிலையான நிலைப்பாட்டிற்காக மிகவும் முக்கியமானது. இலங்கைக்கு ரஷ்யா முக்கியமானது. ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றனர். அவர்கள் நிறையப் பணம் கொண்டு வருகிறார்கள்.

இது ரஷ்ய சுற்றுலாப் பயணிகளுக்கான எனது செய்தி: 'ஐரோப்பாவுக்குப் போகாதே! இலங்கை உள்ளிட்ட நட்பு நாடுகளுக்கு வாருங்கள்! உங்கள் பணத்தை இங்கே செலவிடுங்கள்!'

**கேள்வி:** இலங்கை அமைந்துள்ள அதன் கேந்திர நிலை காரணமாக பெரும்பாலான சர்வதேச சக்திகளுக்கு இணக்கமானதொரு நாடாக மாறியுள்ளது. அவர்கள் இந்தோ–பசிபிக் பற்றி பேசுகிறார்கள். அவர்கள் விதிகள் அடிப்படையிலான ஒழுங்கைப் பற்றி பேசுகிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** யார் இந்த விதிகளைக் கண்டுபிடித்தது? இந்த விதிகள் எங்கே இருக்கின்றன? நாங்கள் சர்வதேச சட்டம் பற்றி பேசுகின்றோம். இதைத் தவிர வேறு எந்தவொரு விதிக்கும் நாங்கள் கட்டுப்பட மாட்டோம். அவர்கள் சர்வதேச சட்டத்தை புறக்கணிக்க விரும்புகிறார்கள். அதனை நாங்கள் ஏற்கவில்லை.

**கேள்வி:** ரஷ்யாவின் தொலைநோக்குப் பார்வை என்ன?

**பதில்:** இராணுவமயமாக்கல் இல்லாமல், சுதந்திரமான நாடுகளை அச்சுறுத்தாமல், பொருளாதாரத் தடைகள் இல்லாமல் திறந்த சம உரிமைகளின் அடிப்படையில் இந்தியப் பெருங்கடல் அமைதியாகவும் ஒத்துழைப்புடனும் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

**கேள்வி:** ஆனால், மேற்கத்திய நாடுகளும் சம உரிமை என்று கூறுகின்றன. 'அவர்கள்' அப்படி இல்லையா?

**பதில்:** ஆனால் அவர்களுக்கு இராணுவத் தளங்கள் உள்ளன. ஏன்? அவர்களின் இராணுவ உள்கட்டமைப்பு ரஷ்ய கூட்டமைப்பிற்கு மிக அருகில் உள்ளது. மெக்சிகோவில் ரஷ்ய ஏவுகணைகளை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? அமெரிக்க எதிர்வினையை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? 1962 ஆம் ஆண்டில் கியூபாவில் அவற்றை நிறுவினோம், அமெரிக்கா மூன்றாம் உலகப் போரை தொடங்கவிருந்தது. ரஷ்யாவுக்கு அருகில் ஏவுகணைகளை நிறுவ முடியும். ஆனால், அதனை அவர்களுக்கு அருகில் வைக்க உங்களை அனுமதிப்பதில்லை. இரட்டை நிலைப்பாடும் பாசாங்குத்தனமும்! இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இந்தியப் பெருங்கடலில் உள்ள இராணுவத் தளங்களை நாங்கள் எதிர்க்கிறோம். அவைகள் யாருக்கு எதிராக நிறுத்தப்பட்டுள்ளன? சீனா உங்களுக்கு ஏதேனும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறதா? நான் அப்படி நினைக்கவில்லை. சீனா யாருக்கும் எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லை. பொருளாதார ஒத்துழைப்பிலும், பிற நாடுகளுக்கு உதவுவதிலும் சீனா கவனம் செலுத்தி வருகிறது. அத்துடன் அவர்கள் ஏனைய நாடுகளுக்கு உதவுகிறார்கள். அதனால்தான் பெய்ஜிங்குடனான எங்கள் உறவை நாங்கள் போற்றுகின்றோம்.

பேட்டி கண்டவர்: கெலும் பண்டார (Kelum Bandara)

(இந்தப்பேட்டி 25.05.2023 அன்று இலங்கையிலிருந்து வெளியாகும் டெய்லி மிரர் பத்திரிகையில் வெளியானது)

# அணு ஆயுதப் போரை உருவாக்காதீர்கள்

**கொ**ரிய தீபகற்பத்திற்குள் அணு ஆயுதங்களைக் கொண்டு வருவதன் மூலம் அவற்றை நாங்கள் பயன்படுத்துவதற்கான சூழலை உருவாக்குகிறீர்கள் என்று வடகொரியா அமெரிக்காவை எச்சரித்திருக்கிறது. ஆசிய–பசிபிக் கடற்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தும் அமெரிக்காவின் முயற்சி தொடர்கிறது. தென் கொரியாவுடன் இணைந்து ஏராளமான போர்ப் பயிற்சிகளை அமெரிக்க இராணுவம் மேற்கொள்கிறது. கிட்டத்தட்ட மாதம் ஒருமுறை அல்லது சில சமயங்களில் ஒரு மாதத்தில் இரு முறை கூட போர்ப் பயிற்சிகள் நடக்கின்றன.

பெரும் அளவில் அமெரிக்க இராணுவத்தினர் இதில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதற்கு வடகொரியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. கடந்த மாதத்தில் அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணைகளைக் கொண்ட அமெரிக்காவின் போர்க்கப்பல் தென் கொரியத் துறைமுகத்திற்குள் நுழைந்தது. தற்போது அந்தக் கப்பல் அந்தத் துறைமுகத்தில்தான் மையம் கொண்டுள்ளது. இந்தக் கப்பல் வருகிறது என்ற செய்தி வெளியானவுடன், வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங்–உன், "வரலாற்றில் இல்லாத அளவிலான அணு ஆயுதப் போரைத் தூண்டும் வகையில் இது இருக்கிறது" என்று எச்சரித்தார்.

வடகொரியாவின் பாதுகாப்புத் துறை அமைச்சரான காங் சுன்–நம் (Kang Sun-nam) வெளியிட்டுள்ள அறிக்கையில், "அணு ஆயுதத்தை சோதித்தபோது, எங்கள் மீது அணுஆயுதங்கள் பிரயோகிக்கப்படும் ஆபத்து எழுந்தால் மட்டுமே நாங்கள் அணு ஆயுதங்களைக் கையாளுவோம் என்று உறுதி எடுத்திருந்தோம். தற்போது அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அத்தகைய நிலையை உருவாக்குகிறது" என்றார். போர் வெறியைத் தூண்டும் வகையில்தான் தென் கொரியா நடந்து கொள்கிறது. புசான் துறைமுகத்தில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கப் போர்க்கப்பலில் தென் கொரிய ஜனாதிபதி தனது இணையரோடு ஏறி நின்று புகைப்படம் எடுத்து கொண்டார். அணு ஆயுதத்தை வைத்துக் கொண்டு வடகொரியாவால் ஒன்றும்செய்ய முடியாது என்று கூறி, அமெரிக்கப்

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# ‘ஜிடிபி’ உண்மையைச் சொல்கின்றதா?

பொருளாதாரத்தில் உலகின் முன்னணி நாடுகளான அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளைத் தொடர்ந்து, 2.7 டிரில்லியன் டொலர் மதிப்புடன் ஐந்தாவது பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுத்துள்ளதாக செய்தி சில மாதங்களுக்கு முன்னர் உற்சாகமாகப் பேசப்பட்டது. ஒரு நாட்டின் வளர்ச்சி அல்லது முன்னேற்றத்தைக் குறிக்கும் ஒற்றை வளர்ச்சிக் குறியீடாக, உலகளாவிய அளவில் ‘ஜிடிபி’ (GROSS DOMESTIC PRODUCT - GDP) என்கிற கருத்தாக்கம் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு நாட்டில், ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்தப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மதிப்பை, ‘ஜிடிபி’ எனச் சுருக்கமாக வழங்கப்படும் ‘மொத்த உள்நாட்டு உற்பத்தி’யைக் குறிக்கின்றது. ஆனால், ‘ஜிடிபி’ என்னும் வளர்ச்சிக் குறியீடு மிகவும் மேம்போக்கானது. வளர்ச்சி என்ற சொல்லுக்குத் தவறான புரிதல்களை உருவாக்குவது என்றும் வாதிடப்படுகிறது.

**இதன் பின்னணி என்ன? மக்களுக்கு என்ன பயன்?**

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் உற்பத்தி, பகிர்வு, நுகர்வு ஆகிய மூன்றும் சம அளவு முக்கியமானவை. ஆனால், ‘ஜிடிபி’ கருத்தாக்கம், உற்பத்தியை மட்டுமே கணக்கில் கொள்கிறது. பகிர்வையும் நுகர்வையும் முற்றாகப் புறந்தள்ளி விடுகின்றது. ஒரு நாட்டின் உற்பத்தி மதிப்பு, அதாவது சந்தை மதிப்பு எவ்வளவு கூடுகிறது என்று மதிப்பிடுகிறதே தவிர, அந்த உற்பத்தி மதிப்பு வளர்ச்சி விகிதம், அந்நாட்டு மக்கள் வாழ்க்கைத் தரத்தின் மீது ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்துகிறதா என்பதைக் கணக்கிடுவதில்லை.

ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ந்துகொண்டே இருப்பதுபோல் தோற்றம் தரும். ஆனால், அந்த நாட்டில் வாழும் மக்கள் எந்த முன்னேற்றத்தையும் உணர இயலாது. பொருளாதாரம் வளர்ந்துகொண்டே இருப்பதுபோல் தோன்றும். ஆனால், அந்நாடு திடீரெனப் பொருளாதார வீழ்ச்சியைச் சந்திக்கும். ஆக, ‘ஜிடிபி’




குறியீட்டை வைத்துப் பொருளாதார ஏற்ற இறக்கங்களைக்கூடக் கணிக்க முடியாது.

2008 இல் ஏற்பட்ட உலக அளவிலான நிதி நெருக்கடியை முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியவில்லை. இது தவிர வறுமை, வேலையின்மை, பாலினச் சமத்துவமின்மை விகிதம், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் என எவற்றையும் ‘ஜிடிபி’யை மட்டும் வைத்துக்கொண்டு தெரிந்துகொள்ள இயலாது. நிலைத்த வளர்ச்சி இலக்குகள் என 17 இலக்குகளை ஐ.நா. அவை வரையறுத்துள்ளது.

‘ஜிடிபி’ வளர்ச்சிப் போக்கு இதனை நிறைவேற்றுவதற்கு உறுதுணையான குறியீடாக இருக்காது எனப்படுகிறது. எனவே, மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு என்னும் வளர்ச்சிக் குறியீடு, எந்த விதத்திலும் உண்மையான வளர்ச்சியைப் பிரதிபலிப்பதில்லை எனத் தீர்க்கமாக வாதிடப்படுகிறது. சரி, நாட்டின் வளர்ச்சியை அளவீடு செய்ய மாற்று அளவீடுகள் இல்லையா?

மனிதவளக் குறியீடு: நாட்டின் உண்மையான பொருளாதார வளர்ச்சியை, மக்களின் வாழ்நிலையை, வாழ்க்கைத் தரத்தை, வெளிக்காட்டும் சில அளவீடுகள் உள்ளன. அவற்றில் ஒன்று வெகுவாக அறியப்பட்ட ‘மனித மேம்பாட்டுக் குறியீடு’ [Human Development Index (HDI)]. கல்வி, ஆரோக்கியம், மனித சராசரி ஆயுள்காலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தயார் செய்யப்படும் குறியீடு இது.

வெறும் உற்பத்தி மதிப்பை மட்டும் கணக்கில் கொள்ளாமல், வாழ்க்கைத் தரக் குறியீடுகளின் அடிப்படையில் இந்தக் குறியீட்டு எண் தயார் செய்யப்படுவதால், உண்மையான வளர்ச்சியை மதிப்பீடு செய்ய ‘ஜிடிபி’ – யை விடச் சிறந்த கருவி இது. இதுவும்கூட உண்மையான வளர்ச்சியை முழுவதுமாக அளந்து பார்க்கத்தக்க சிறந்த கருவியல்ல என்று விமர்சனம் இருக்கிறது. ஆனாலும், ‘ஜிடிபி’ கணக்கீட்டைவிடவும் ஒப்பீட்டளவில் சிறந்த மதிப்பீடு என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

உலக நாடுகளின் கவனத்துக்கு: பரவலாக அறியப்படாத வேறு சில சிறந்த வளர்ச்சிக் குறியீடுகளும் உண்டு. அத்தகைய கணக்கீட்டுக்கான தரவுகள் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரி சேகரிக்கப்படுவதில்லை. ‘மகிழ்ச்சிக்கான புவிக்கோளக் குறியீடு’ (Happy Planet Index) ஒன்று கணக்கிடப்படுகிறது. சராசரி வாழ்நாள், வாழ்க்கை திருப்தி, சூழலியல் சீர்கேடு ஆகியவற்றை உட்படுத்தி இந்தக் குறியீடு தயாரிக்கப்படுகிறது.

இந்தக் குறியீட்டை அளவுகோலாகக் கொண்டால், முன்னேற்றப் பாதையில் கொஸ்ரரிகா (Costa Rica) நாடுகூட அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பணக்கார நாடுகளை முந்தி விடுகின்றது. வாழ்க்கைத் தரம், ஏற்றத்தாழ்வுகள்,

குன்றாத வளர்ச்சி, சூழலியல் பாதிப்புகள் ஆகியவற்றை முன்வைத்து மதிப்பீடுகளை உருவாக்கலாம்.

ஆனால், அவ்வாறான மதிப்பீடுகளை எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரி கணக்கிடுவது சற்றுக் கடினம். பொத்தாம் பொதுவானதாகவும் தோன்றலாம். ஆனால், நிச்சயமாக 'ஜிடிபி' குறியீட்டைவிட மேம்பட்ட வளர்ச்சிக் குறியீடாக இதைப் பயன்படுத்த முடியும். இத்தகைய மதிப்பீடுகள் சாத்தியம் இல்லை என்று ஒதுக்கித் தள்ளாமல், அவற்றைச் செம்மைப்படுத்தி உலக நாடுகள் ஒரு தரமான மதிப்பீட்டு உத்தியைத் தயாரிக்க முன்வர வேண்டும்.

இன்னும் சில கணக்கீடுகள்: சமூகத்தின் பெரும் பகுதி மக்கள் உழைப்பு சக்தியை நல்கி, அதன் பலனைப் பெற்றே வாழக்கூடியவர்களாக உள்ளனர். அத்தகைய சமூகத்தில் உழைப்புச் சந்தையை அடிப்படையாகக் கொண்டு ஒரு குறியீட்டை உருவாக்கலாம். தொழிலாளர்களின் சராசரிக் கூலியை, வேலைவாய்ப்பு விகிதத்தால் பெருக்கி, இந்தக் குறியீடு உருவாக்கப்படுகின்றது. 'ஜிடிபி' கணக்கீட்டைக் காட்டிலும் உண்மையான வளர்ச்சியைப் புரிந்துகொள்ள இந்தக் குறியீடு உதவும்.

இத்தகைய கணக்கீடு வேறு ஓர் உண்மையையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இந்த இரண்டு வகைக் குறியீடுகளும் நேரெதிர் திசையில் பயணிக்கக்கூடியவை. அதாவது, மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு அதிகரித்துக்கொண்டே செல்லும் அதேவேளை, உழைப்புச் சந்தைக் குறியீடு குறைந்து கொண்டே செல்கின்றது.

ஒரு நாட்டில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் சத்தான உணவு அடிப்படையில், குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின் உண்மையான வளர்ச்சி என்பது, அந்த நாட்டில் வாழும் மக்கள் தங்கள் ஆரோக்கியத்தைப் பேணக் கிடைக்கும் சத்தான உணவையும் பொறுத்ததே. இந்த மதிப்பீடு வளர்ச்சியை அளவிடும் சிறந்த கருவியே.

காலநிலை மாற்றம் எல்லா துறைகளின் மீதும் பெரும் தாக்கம் செலுத்திவருவதால், சூழலியல் சார்ந்த மதிப்பீட்டு உத்திகள் தரமான வாழ்க்கையை அறிந்துகொள்ள உதவும். கரியமில வாயு ($CO_2$) உமிழ்வில் தனி மனிதர்களின் பங்கு என்ன என்பதும் கூட இக்காலகட்டத்தில் முக்கியக் குறியீடே.

செல்வந்தர்கள் தங்கள் வாழ்க்கை முறை, தொழில் துறைச் செயல்பாடுகள் மூலம் எந்த அளவுக்கு இதில் பங்களிக்கின்றனர், அடித்தட்டு மக்களுக்கு இதில் பங்கு உண்டா என்பதன் அடிப்படையில் வளர்ச்சியைப் புரிந்துகொள்ள இதுவும் ஒரு சிறந்த கருவியாக இருக்கும்.

மாற்றம் அவசியம்: "மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சிக் குறியீடு, இனிமேலும் ஒரு நாட்டின் வளர்ச்சியைக் குறிக்கும் அளவுகோலாகத் தொடர்வது சரியல்ல" என ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் செயலாளர் அன்ரோனியோ குற்றர்ஸ் (António Guterres) வெளிப்படையாகவே பேசியிருக்கிறார்.

பொருளாதார நிபுணர்கள் பலர், "ஜிடிபி அளவீடானது வளர்ச்சியைக் காட்டும் அளவுகோலாக இல்லை. மாற்று மதிப்பீட்டு உத்திகள் பயன்படுத்தப்பட வேண்டும்" என்று தொடர்ந்து கூறிவருகின்றனர். இருந்தபோதும், பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புக்கள் 'ஜிடிபி' அளவீட்டிலிருந்து இதுவரை நகரவில்லை.

மேம்போக்கான உற்பத்தி மதிப்பு உயர்வை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, வளர்ச்சியைக் கொண்டாடி வருகிறோம். உண்மையான வளர்ச்சியை வெளிப்படுத்தும் குறியீடு ஒன்றை நடைமுறைப்படுத்தினால், அதில் மக்கள் நலன் முன்னிறுத்தப்படும். அதே வேளையில், முதலாளிகளின் இலாப நோக்கம் பாதிக்கப்படலாம்.

இந்தத் தயக்கமே மாற்று மதிப்பீட்டு உத்திகள் நடைமுறைக்கு வராமல் இருப்பதற்குக் காரணமா? 'ஜிடிபி' கணக்கீடு எளிமையானது. மாற்று உத்திகளில் கணக்கீடு சற்றுக் கடினம் என்கிற ஒரே காரணத்துக்காக, பிரச்சினைகள் நிறைந்த அளவீட்டையே தொடர்ந்து பயன்படுத்தி, வளர்ச்சி என்ற மாயையில் மக்களை வைத்திருக்கப் போகிறோமா அல்லது ஆக்கபூர்வமான மாற்று மதிப்பீட்டு முறையை உருவாக்கப் போகிறோமா?

**– நா.மணி, வே.சிவசங்கர்**

# பாலஸ்தீனத்தை திறந்தவெளி சிறையாக மாற்றிவிட்டார்கள்

பாலஸ்தீனத்தில் தான் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை திறந்தவெறி சிறையாக இஸ்ரேல் மாற்றிவிட்டது என்று ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதர் பிரான்செஸ்கா ஆல்பனீஸ் குற்றம் சாட்டியுள்ளார். பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளதோடு, அப்பகுதிகளில் மக்களைக் குடியேற்றும் வேலைகளையும் செய்து வருகிறார்கள். குறிப்பாக, மேற்குக் கரைப்பகுதியில் தனது ஆக்கிரமிப்பை முழுமையடையச் செய்யும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, அமெரிக்காவின் ஆதரவோடு தனது சட்ட விரோத நடவடிக்கைகளை இஸ்ரேல் செய்து வருகிறது. இஸ்ரேலின் இந்த மனிதகுல விரோத நடவடிக்கைகள் குறித்துக் கருத்து தெரிவித்த ஐ.நா.சபையின் சிறப்புத் தூதர் ஃபிரான்செஸ்கா அல்பனேஸ்(Francesca Albanese), "கடந்த 56 ஆண்டுகளில் அடிப்படை உரிமைகளை குற்றச் செயல்களாகவும், கூட்டம் கூட்டமாக சிறைகளில் அடைத்தும் இஸ்ரேல் பாலஸ்தீனப் பகுதிகளை நிர்வகித்து வருகிறது. தான் ஆக்கிரமித்துள்ள அனைத்து பாலஸ்தீனப் பகுதிகளையும் திறந்தவெளிச் சிறையாக மாற்றியுள்ளார்கள்" என்று தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பின் கூட்டம் நடைபெற்று வருகிறது. அந்தக் கூட்டத்தில் ஆல்பனீஸ் அளித்துள்ள அறிக்கையில்தான் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பில் உள்ள பாலஸ்தீனப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்ந்து சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள். தொடர் கண்காணிப்பில் உள்ளனர். காரணமில்லாமல் தண்டிக்கப்பட்டு வருகிறார்கள் என்று தனது

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# நைஜரில் நடந்தது ‘கலகம்’ அல்ல, கிளர்ச்சி

**மேற்கு ஆப்பிரிக்காவில் நடப்பது என்ன?**



மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நைஜர் (Niger) நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள இராணுவத்தினர், பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் விடுத்த மிரட்டலை முற்றாக நிராகரித்துள்ளனர். நைஜரின் வான் எல்லைகளை மூடியுள்ள இராணுவத்தினர், நைஜர் மீது போர் தொடுக்கும் நோக்கத்துடன் அத்துமீறி எவர் உள்ளே நுழைந்தாலும் மிகக்கடுமையான பதிலடியையும் பின்விளைவுகளையும் சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்துள்ளனர். இந்தப் பின்னணியில், நைஜரில் நடந்துள்ள இராணுவக் ‘கலகத்தை’ நிதானமாக கையாளாமல் அந்நாட்டின் இராணுவத்தினருக்கு எதிராக பிரான்ஸ் உள்ளிட்ட ஏகாதிபத்தியங்கள் போர் நடவடிக்கைகளில் இறங்குமானால், அது ரஷ்யா உள்ளிட்ட நாடுகளையும், மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மாலி உள்ளிட்ட பெரிய நாடுகளையும் போருக்குள் இழுக்கும் மிகப்பெரும் நாசகார செயலாக அமையும் என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் எச்சரித்துள்ளனர். இந்த நிலையில், நைஜரில் இருக்கும் தங்களது படைகளை முற்றாக விலக்கிக் கொள்வது குறித்து பிரான்ஸ் இராணுவத் தளபதி, பிரான்ஸ் ஆட்சியாளர்களுடன் பேசி வருவதாக பாரீஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2023 ஜூலை 26 அதிகாலை 3 மணி. நைஜர் தலைநகர் நியாமே (Niamey) இல் உள்ள தமது மாளிகையில் ஜனாதிபதி முகமது பஜூம் (Mohamed Bazoum) ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். திடீரென அவரது அறைக்குள் சென்று மெய்க்காவலர்களே அவரை கைது செய்தனர். நைஜர் இராணுவத்தின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் அப்தரஹ்மான் சியானி (Abdourahmane Tchiani) தலைமையிலான இராணுவத்தினர் உடனடியாக நாட்டின் எல்லைகள் மூடப்படுவதாகவும் நாடு முழுவதும் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதாகவும் அறிவித்தார். ஜனாதிபதியை சிறை வைத்து, ஆட்சியைக் கைப்பற்றியது நைஜர் இராணுவம். இந்தத் தகவல் அடுத்த சில நிமிடங்களில் ஆப்பிரிக்க நாடுகள் முழுவதிலும் பரவியது. மேற்கு ஆப்பிரிக்க பொருளாதாரக் கூட்டமைப்பு, ஆப்பிரிக்க யூனியன், ஐரோப்பிய யூனியன் ஆகியவை நைஜர் இராணுவத்தை கடுமையாக கண்டித்தன.

இவர்கள் எல்லோரையும் விட பெரும் அதிர்ச்சி பிரான்சுக்கும் அமெரிக்காவுக்கும் தான். ஏனென்றால் பல நூறு ஆண்டுகளாக நைஜரை அடிமைப்படுத்தி வைத்திருந்த காலனி ஆதிக்க சக்தி பிரான்ஸ். 1960 ஒகஸ்ட் 3 அன்று நைஜர் விடுதலை பெற்ற பிறகும் கூட இன்று வரையிலும் அங்கு பிரான்சின் ஆதிக்கமே நிலவுகிறது. நைஜரின் ஆட்சியாளர்கள் பிரான்சின் கைக்கூலிகளாகவே செயல்பட்டார்கள். இதைவிட இன்னும் அதிர்ச்சி, அமெரிக்கா மற்றும் பிரான்சுக்கு நைஜரிலேயே இராணுவத் தளங்கள் உள்ளன. அந்த இராணுவத் தளங்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு நைஜர் இராணுவத்தினர் இந்தக் கலகத்தை நடத்தியிருப்பதுதான். ஜூலை 28 அன்று நைஜர் தேசியக் கவுன்சிலின் புதிய தலைவராக – அதாவது ஜனாதிபதியாக – பிரிகேடியர் ஜெனரல் அப்தரஹ்மான் சியானி நியமிக்கப்பட்டிருப்பதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பை இராணுவம் வெளியிட்டது.

**‘கலகம்’ நடந்த 4வது நாடு**

மேற்கு ஆப்பிரிக்காவில் நைஜருக்கு அருகே உள்ள பெரிய நாடுகள் மாலி (Mali) மற்றும் புர்கினா ஃபசோ (Burkina Faso) ஆகியவை. நைஜரில் தற்போது நடந்திருப்பது போலவே மாலியில் 2020 ஒகஸ்ட்டிலும், புர்கினா ஃபசோவில் 2022 ஜனவரியிலும், கினி (Guinee) இல் 2021 செப்டம்பரிலும் இராணுவத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டு, ஆட்சியாளர்களை சிறைப்பிடித்தனர். அடுத்தடுத்து இந்த நாடுகளில் நடந்துள்ள இராணுவக் கிளர்ச்சிகள், மக்கள் மத்தியில் அச்சத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு பதிலாக மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால், தங்களது நாடுகள் மிக நீண்டகாலமாக, நிரந்தரமாக பொருளாதார நெருக்கடியிலும் ஒடுக்குமுறையின் பிடியிலும் இருப்பதற்கு காரணமே இங்குள்ள ஆட்சியாளர்களின் உதவியோடு பிரான்ஸ் மற்றும் அமெரிக்க இராணுவப் படைகள் மிக நீண்டகாலமாக முகாமிட்டிருப்பதுதான் என இம்மக்கள் கருதுகிறார்கள்.

**அடிமைகளான ஆட்சியாளர்கள்**

நைஜரில் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு, இராணுவத்தின் முதல் பத்து உயரதிகாரிகள் கூட்டாக அரசாங்கத்தை நடத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு முன்பு 2010 பெப்ரவரியில் நைஜரில் ஒரு இராணுவக்கலகம் நடந்தது. மீண்டும் 2011 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிற வரை இராணுவத்தினர் ஆட்சி நிர்வாகத்தை நடத்தினார்கள். ஆனால் அப்போதும் ஆட்சிக்கு வந்த நபர்கள் அமெரிக்கா மற்றும் பிரான்சின் அடிமைகளாகவே தங்களை நிலைநாட்டிக் கொண்டனர். குறிப்பாக இராணுவக் கலகத்திற்குப் பிறகு 2011 தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியான மகமதவ் ஐசோபவ் (Mahamadou Issoufou), உலகிலேயே அமெரிக்காவின் மிகப்பெரிய ஆளில்லா போர் விமானத்தளத்தை நைஜரின் அகடிஸ் (Agadez) நகரில் அமைப்பதற்கு கையெழுத்திட்டார். அதேபோல, பிரான்சின் மிகப்பெரிய யுரேனிய சுரங்கக் கொம்பெனியான ஒரானா (Orano).

(முன்பு இது அரீவா (Areva) என்று அழைக்கப்பட்டது) அமைந்துள்ள அர்லிட் (Arlit) என்ற மிகப்பெரும் நகரத்தின் ஒட்டு மொத்த பாதுகாப்பு நிர்வாகத்தையும் பிரான்ஸ் இராணுவ சிறப்புப் படைகளிடம் ஒப்படைத்தார்.

**ஜெனரல் சாலிபவ் மோதி**

இப்படி அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்கள், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்கு அடிமைச் சேவகம் செய்து வந்தது. இது நைஜர் மக்கள் மத்தியிலும் இராணுவ அதிகாரிகள் மத்தியிலும் ஆத்திரத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது. 2010 இல் ராணுவக் கலகத்திற்கு தலைமையேற்ற அதிகாரியான ஜெனரல் சாலிபவ் மோதி (Salifou Modi) , அடுத்த கிளர்ச்சிக்கான தருணத்திற்காக காத்திருந்தார். இந்தப் பின்னணியில் மாலியில் நடந்த இராணுவக் கலகத்தைத் தொடர்ந்து நைஜர் இராணுவத்திற்குள் மீண்டும் கிளர்ச்சி சிந்தனை எழுந்தது.

2023 பெப்ரவரியில் ரோமில் நடைபெற்ற, ஆப்பிரிக்க கண்டத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க இராணுவப் பிரிவுகளின் கமாண்டர்களது மாநாட்டில், நைஜர் இராணுவத்தின் தளபதி என்ற முறையில் பங்கேற்பதற்கான வாய்ப்பு மேற்கண்ட ஜெனரல் சாலிபவ் மோதிக்கு கிடைத்தது. அந்த மாநாட்டில் பங்கேற்ற அவர், ஆப்பிரிக்கக் கண்டத்தில் அமெரிக்க இராணுவம் எப்படியெல்லாம் ஒடுக்குமுறைக்கு திட்டமிடுகிறது என்பதை அறிந்து கொண்டார். இத்தகைய பின்னனியில் 2023 மார்ச்சில் ஜெனரல் சாலிபவ் மோதி, மாலி நாட்டிற்கு சென்று, அங்கு ஆட்சியைக் கைப்பற்றி நிர்வாகம் நடத்திவரும் இராணுவத் தளபதிகளை நேரில் சந்தித்தார். நைஜர் மற்றும் மாலி இராணுவங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென அவர்கள் முடிவு செய்தனர். இந்த சந்திப்பு, நைஜர் ஜனாதிபதியாக இருந்த முகமது பஜுமுக்கு தெரிந்தே நடந்தது என்ற போதிலும், இரு இராணுவ தளபதிகளுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை இரகசியமானதே!

இதன்பின்னர் ஜூன் மாதத்தில் மேற்கண்ட ஜெனரல் சாலிபவ் மோதி இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, ஐக்கிய அரபு இராச்சியத்தின் (UAE) நைஜரின் தூதராக நியமிக்கப்பட்டார். இராணுவத்திற்கு வெளியே அவர் இருந்த போதும், அவரைத் தொடர்ந்து தளபதியாக பொறுப்புக்கு வந்த அப்தரஹ்மான் சியானியுடனான தொடர்பிலேயே இருந்தார் என்றும் அடுத்த நகர்வுகள் குறித்து வழிகாட்டி வந்தார் என்றும் நைஜர் தலைநகர் நியாமேவில் தற்போது கூடியிருக்கும் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். எனவே நைஜரில் தற்போது நடந்திருப்பது திடீர் கலகம் அல்ல. மாறாக தங்களது நாட்டை கூறுபோடும் அமெரிக்க மற்றும் பிரான்ஸ் ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக நீண்ட நாட்களாக திட்டமிட்டு தெளிவான முறையில் நடத்தப்பட்ட ஒரு இராணுவக் கிளர்ச்சியே ஆகும்.

**பிரான்ஸ் கைக்கூலி**

சிறைபிடிக்கப்பட்டு அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டுள்ள ஜனாதிபதி முகமது பஜூமை, ‘ஒரு பிரான்ஸ் கைக்கூலி’ என்று இராணுவத்தினரும் மக்களும் சாடுகிறார்கள். அவரும் அவரது தலைமையிலான பணவெறி பிடித்த கும்பலும் நாட்டின் சொத்துக்கள் அனைத்தையும் பிரான்சிடம் அடகு வைத்துவிட்டார்கள் என்று குமுறுகிறார்கள். உலகில் யுரேனியம் குவிந்திருக்கும் நாடுகளில் ஒன்று நைஜர் என்பது உலகில் பலருக்கு தெரியாத விசயம். இத்தனை மிகப்பெரிய சொத்து தங்களது பூமியில் இருந்தும், அதை தமது சொந்த மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தாமல் பிரான்சின் கொள்ளைக்காக, பிரான்ஸ் அணுமின் உற்பத்தி கோர்ப்பரேட் கம்பெனிகளின் கொள்ளை இலாபத்திற்காக வாரி இரைக்கும் பாதகத்தைத்தான் ஜனாதிபதி முகமது பஜூம் கடந்த பத்தாண்டு காலமாக செய்து வந்தார் என அந்நாட்டு மக்கள் கொதிக்கிறார்கள்.

**நைஜர் யுரேனியம் பிரான்சில் ஒளிர்கிறது**

நைஜரின் மிகப்பெருவாரியான யுரேனிய கனிமவளத்தை பிரான்சைச் சேர்ந்த ‘சோமைர்’ (SOMAÏR - Société des Mines de l'Aïr) எனும் கோர்ப்பரேட் நிறுவனமே அள்ளிச் செல்கிறது. இந்த நிறுவனத்துடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டதாக நைஜர் அரசாங்கம் அறிவித்திருந்தாலும், உண்மையில் இந்த நிறுவனத்தின் 85 சதவீத பங்கு பிரான்ஸ் அணுசக்தி ஆணையம் மற்றும் இரண்டு பெரும் பிரெஞ்சு கோர்ப்பரேட் கம்பெனிகள் வசமே உள்ளது. வெறும் 15 சதவீத பங்குகளே நைஜர் அரசாங்கத்திற்கு சொந்தம். உலகில் ஒட்டுமொத்த உற்பத்தியாகும் யுரேனியத்தில் 5 சதவீதத்திற்கும் அதிகமான யுரேனியம் நைஜரிலிருந்து செல்கிறது. நைஜர் யுரேனியம் தான் உலகிலேயே மிக வீரியமும் அதிக எரிதிறன் தரமும் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் தங்கம் ஆகியவை குவிந்து கிடக்கிற பூமி நைஜர். பிரான்சில் வீடுகளில் எரியும் ஒவ்வொரு மூன்று மின் விளக்குகளில் ஒரு விளக்கு நைஜரிலிருந்து கிடைக்கப்பெறும் யுரேனியத்தால் உருவான மின்சாரத்தில் எரிகிறது. இத்தனை பெரிய செல்வவளம் கொண்டுள்ள நாடாக இருந்த போதிலும் நைஜரில் 42 சதவீத மக்கள் கொடிய வறுமையின் பிடியில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆண்டாண்டு காலமாக தங்களது கைகளில் இருந்த செல்வ வளங்கள், கனிம வளங்கள் பறிக்கப்பட்டு செல்வதையே நைஜர் மக்கள் வேதனையோடு பார்த்து வருகிறார்கள்.

நைஜரில் இராணுவம் கிளர்ச்சி செய்ததும், அதற்கு இலட்சக்கணக்கான மக்கள் ஆதரவு தெரிவித்து தலைநகர் நியாமேயில் கூடியிருப்பதும், கிளர்ச்சியைக் கைவிட்டு பழைய ஜனாதிபதியையே மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர வைக்கவில்லையென்றால் இராணுவ நடவடிக்கையை வெளியிலிருந்து எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்ற பிரான்ஸ் உள்ளிட்ட ஏகாதிபத்தியங்களின் மிரட்டல்களுக்கு பதிலடிகள் கொடுப்பதும், மீறி உள்ளே நுழைந்தால் வரலாறு காணாத அடியைப் பெறுவீர்கள் என்று கம்பீரமாக எச்சரிக்கை விடுப்பதும்… இவை அனைத்தும் பல்லாண்டு காலமாக பிரான்ஸ் ஏகாதிபத்தியத்தின் அடிமைகளாக இருந்த மக்களின் கொந்தளிப்பும் எழுச்சியுமே ஆகும்.

ஜூலை 30 அன்று கூடிய, அமெரிக்கா மற்றும் பிரான்சின் ஆதரவு பெற்ற, ‘மேற்கு ஆப்பிரிக்க பொருளாதாரக் கூட்டமைப்பு’, ஓகஸ்ட் 6ஆம் திகதிக்குள் ஜனாதிபதி முகமது பஜூமை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர வைக்காவிட்டால் இராணுவ நடவடிக்கை உள்பட கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று நைஜர் இராணுவ தளபதிகளுக்கு மிரட்டல் விடுத்தது. ஓகஸ்ட் 6 அன்று இதற்கு பதிலடி கொடுத்த நைஜர் இராணுவ அதிகாரிகள், பிரான்சின் இராணுவம் உடனடியாக நைஜரை விட்டு முகாம்களை காலிசெய்து வெளியேற வேண்டுமென்று கெடு விதித்தனர். ஓகஸ்ட் 6 அன்று

அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஏகாதிபத்தியங்களுக்கு எச்சரிக்கை விடும் விதத்தில், தலைநகர் நியாமேயில் உள்ள விளையாட்டு மைதானத்தில் இலட்சக்கணக்கில் மக்கள் கூடினர். அவர்களை புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள ஜெனரல் அப்தரஹ்மான் சியானி சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

**லிபியாவில் நடந்த பயங்கரத்தின் தாக்கம்**

இந்தப் பிரதேசத்தையொட்டி அமைந்துள்ள லிபியாவில் 2011 ஆம் ஆண்டில் நேட்டோ இராணுவத்தை இறக்கி அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகள் கொடிய தாக்குதலை கட்டவிழ்த்து விட்டன. ஜனாதிபதி மும்மர் கடாபி கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். லிபியாவின் அதிக எரிதிறன் கொண்ட பெட்ரோலிய வளத்தை முழுமையாக கைப்பற்றிக் கொண்ட அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளின் பெரும் கோர்ப்பரேட் கம்பெனிகள், ‘ஐ.எஸ்’ உள்ளிட்ட இஸ்லாமிய அடிப்படைவாத பயங்கரவாத அமைப்புகளிடம் அந்த நாட்டை ஒப்படைத்தனர். கடந்த 12 ஆண்டுகளாக லிபியாவில் ஆயுத வியாபாரம், மனிதப் படுகொலைகள், மனிதக் கடத்தல்கள், போதைப் பொருள் கடத்தல், இயற்கை வளங்கள் சூறையாடல் என ஏகாதிபத்தியத்தின் வெறியாட்டம் இடைவிடாமல் தொடர்கிறது. அதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளை நேரடியாக பாதித்துள்ளன. இது மாலி மற்றும் நைஜர் உள்ளிட்ட நாடுகளின் மக்களிடையே கொதிப்பையும் எதிர்ப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. மேற்கண்ட ஏகாதிபத்திய நாடுகளுடன்தான் தங்களது நாடுகளின் ஆட்சியாளர்கள் மிக நெருக்கமான உறவு கொண்டிருக்கிறார்கள் என்பதும் உள்நாட்டு மக்களின் நலன்களைப் புறக்கணித்து அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஏகாதிபத்திய நலன்களுக்காக சேவகம் செய்பவர்களாக தங்களது ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள் என்பதும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் மக்களை, ஒரு மாற்றத்தை எதிர்நோக்கி உந்தித் தள்ளியது. இந்தப் பின்னணியில் தான், ஊழல் ஆட்சியாளர்களை தூக்கியெறிந்த இராணுவத்தினருக்கு மக்கள் பெரும் வரவேற்பு அளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நன்றி: தீக்கதிர்**

# உலகின் நுரையீரல் பாதுகாக்கப்படுகிறது

பிரேசில் வலதுசாரி ஜனாதிபதி போல்சானரோவின் ஆட்சிக்காலத்தில் விரைவுபடுத்தப்பட்ட காடுகள் அழிப்பு நடவடிக்கைகளுக்கு வேகத்தடை போடும் இடதுசாரி அரசின் பணி நல்ல பலனைத் தந்துள்ளது. தென் அமெரிக்காவின் பல நாடுகளில் பரவியிருக்கும் அமேசன் காடுகள் உலகின் நுரையீரல் என்று அழைக்கப்படுகிறது. அந்தக் காட்டுப் பகுதிக்குள் இருக்கும் ஏராளமான இயற்கை வளங்கள் மீது பன்னாட்டுப் பெரு நிறுவனங்களின் கண்கள் பதிந்துள்ளன. அந்த வளங்களை சுரண்டும் நோக்கத்தில் தென் அமெரிக்க நாடுகளில் வலதுசாரித் தலைவர்களை ஜனாதிபதிகளாக ஆக்க அந்த நிறுவனங்கள் உதவின. அவர்களின் முயற்சிகளை மீறி மக்கள் ஆதரவுடன் இடதுசாரித் தலைவர்கள் வெற்றி பெற்றால் அவர்களின் அரசுகளைக் கவிழ்க்கும் வேலையில் அந்த பெரு நிறுவனங்கள் ஈடுபட்டன. அதில் வெற்றியும் பெற்றன. அமேசன் காடுகளின் பெரும்பகுதி பிரேசிலில் உள்ளது. அமெரிக்க ஆதரவுடன் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற ஜெய்ர் போல்சானரோ, பெரு நிறுவனங்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டார்.

பிரேசில் மக்கள் மட்டுமல்ல, அமேசன் காடுகளின் இருப்பு ஒட்டுமொத்த உலகத்திற்கே பலன் தரும் என்பதால் சர்வதேச அளவில் அந்தக் காடுகளை அழிப்பதற்கு எதிர்ப்பு கிளம்பியது. அதையெல்லாம் பொருட்படுத்தாமல் வலதுசாரிகள் இயற்கை வளங்களை வளர்ந்த நாடுகளின் கைகளில் ஒப்படைக்கத் துடித்தனர். அமேசன் பாதுகாப்பு என்பதைத் தனது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக இடதுசாரித் தலைவரான லூலா டி சில்வா மக்களிடம் அளித்தார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் லூலாவின் முனைப்பு மிகச்சரியாக இருப்பதையே புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் காடுகளை அழிக்கும் பணி 33.6 விழுக்காடு அளவிற்கு குறைக்கப்பட்டிருக்கிறது. முந்தைய நான்கு ஆண்டுகளில் ஏற்பட்ட அழிப்பையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 2 ஆயிரத்து 500 சதுர மைல் அளவில் காடுகள் அழிக்கப்பட்டன. தற்போது அது வெறும் 1,023 சதுர மைல் ளாகக் குறைந்துள்ளன. இத்தகைய அழிப்பை முழுவதுமாக தடுப்பதோடு, காட்டுப்பகுதியை அதிகப்படுத்துவோம் என்று பிரேசில் அரசு தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் மீண்டும் வரண்ட காலநிலை தொடங்குகிறது. இந்தக் காலகட்டத்தில் வனப் பகுதிகள் பாதிப்புக்குள்ளாவது வழக்கமான ஒன்றாகும். கால நிலையைப் பயன்படுத்திக் கொண்டு காட்டுப்பகுதிகளில் உள்ள வளங்களைக் குறிவைத்துப் பலரும் இயங்குவார்கள்.



இருந்தாலும் தங்கள் பணி தடையில்லாது தொடரும் என்று கூறியுள்ள பிரேசில் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் செயல் செயலாளர் ஜோவோ பாவ்லோ, “காட்டுப்பகுதிகள் அழிந்து வரும் வேகத்தைக் குறைத்து விட்டோம். தற்போது அழிவு அதிகரிக்கவில்லை. அதேவேளையில் வரும் மாதங்கள் எங்களுக்கு சவாலானதாகவே இருக்கும்” என்றார். கடந்த ஆண்டு ஜூன் மாதத்தோடு, நடப்பாண்டு ஜூன் மாதத்தை ஒப்பிடும்போது அழிவு 41 விழுக்காடாக குறைந்திருக்கிறது. இந்தப் புள்ளிவிபரம் லூலா தலைமையிலான அரசுக்கு உற்சாகத்தை அளிக்கக்கூடியதாகவே இருக்கிறது. சட்டவிரோதமான அழிப்புப் பணியைக் குறைப்பேன் என்று அவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதை நோக்கி நகர்கிறார்கள் என்பதை இது காட்டுகின்றது. வலதுசாரிகள் ஆட்சியில் இருந்த காலத்தில் காடுகள் அழிப்பு

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# இந்தியா எழுச்சி பெறுவதை அமெரிக்கா விரும்பாது!


## -சிங்கப்பூரின் முன்னாள் இராஜதந்திரி கிஸோர் மஹ்புபானி கருத்து

(சிங்கப்பூரின் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதியாகவும், ஐ.நா. பாதுகாப்புச்சபைத் தலைவராகவும் இருந்தவர் Kishore Mahbubani. இவர் அண்மையில் சீனாவிலிருந்து வெளியாகும் Global Times பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் சில முக்கியமான பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன)

**கேள்வி:** "ஆசியாவின் 21வது நூற்றாண்டு" என்ற உங்கள் நூலில் மேற்குலகின் காலம் முடிந்துவிட்டது என்றும், ஆசியாவின் எழுச்சி ஆரம்பமாகியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆசியாவின் எழுச்சி சகாப்தம் என்பது உலகளாவிய அரசியல் போக்கில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும்?

**பதில்:** இந்தப் புத்தகத்தில் உள்ள சுவாரசியம் இதுதான். இந்தப் புத்தகம் 2022 ஜனவரியில் வெளிவந்த போது, ஆங்கில மொழியாக்கத்தை 20,000 பேர் வரை வாசிப்பார்கள் என இதன் வெளியீட்டாளர் எதிர்பார்த்தார். ஆனால் அதற்குப் பதிலாக 160 நாடுகளைச் சேர்ந்த 3 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் இந்த நூலை இணையத்தில் வாசித்துள்ளார்கள்.

3 மில்லியன் மக்கள் இந்தப் புத்தகத்தை வாசித்ததிற்கு என்ன காரணம்? இதற்கு எளிமையான பதில் என்னவென்றால், உலகின் பெரும் எண்ணிக்கையான மக்கள் 21 ஆம் நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டு என்பதைப் புரிந்து கொண்டிருப்பதுதான். ஆனால் அவர்கள் அந்தத் தகவலை அறிந்து கொள்ளாதிருப்பதற்குக் காரணம், 21 ஆம் நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டு என்பதை மேற்கத்தைய ஊடகங்கள் நிராகரித்து வருவதுதான். அவைகள் உங்களுக்கு பல பொய்க்



*கிஸோர் மஹ்புபானி*

கதைகளைக் கூறுவார்கள்.

2000 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் நிகர தேசிய வருமானம் சீனாவினுடையதை விட எட்டு மடங்கு அதிகமாக இருந்தது. இப்பொழுது அதன் வருமானம் சீனாவினுடையதை விட ஒன்றரை மடங்கு மட்டுமே அதிகம். விரைவில் சீனா அமெரிக்காவை முந்தி விடும். ஆசியான் (Asean) நாடுகள் கூடச் சிறப்பாகச் செயல்படுகின்றன. 2000 ஆம் ஆண்டில் யப்பானின் பொருளாதாரம் ஆசியான் நாடுகளுடையதை விட எட்டு மடங்கு அதிகமாக இருந்தது. இப்பொழுது ஆக ஒன்றரை மடங்குதான் அதிகமாக இருக்கிறது. ஆசியானும் விரைவில் யப்பானை விஞ்சிவிடும்.

இந்த உண்மையை உலகின் தென் பகுதி நாடுகள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளன. பிரான்ஸ், ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளும் புரிந்து கொண்டுள்ளன. அமெரிக்கா மட்டும் இதை ஏற்க மறுக்கிறது. 20 ஆம் நூற்றாண்டு போலவே, 21 ஆம் நூற்றாண்டும் தன்னுடையதே என அமெரிக்கா விதண்டாவாதம் செய்கிறது.

**கேள்வி:** நீங்கள் CIA என்பதற்கு ஒரு புது வியாக்கியானம் கொடுத்துள்ளீர்கள். அதாவது அதன் அர்த்தம் China, India, Asean என்று கூறியுள்ள நீங்கள், உலகின் அடுத்த பொருளாதார உந்துவிசை இயந்திரம் இவைதான் என்றும் கூறியுள்ளீர்கள். அத்துடன் உலகின் எதிர்காலத் தலைமைச் சக்தி இந்தியா எனவும் எதிர்வு கூறியுள்ளீர்கள். இந்தியா எழுச்சி பெறுவதை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளும் என நினைக்கிறீர்களா?

**பதில்:** நீங்கள் சொல்வது சரி. இந்தியா எழுச்சி பெறுவதை அமெரிக்கா கடுமையாக எதிர்க்கும். இவ்வாறு அமெரிக்கா செய்வது இயல்பானது. பனிப்போர் காலத்தில் 1971 இல் ஹென்றி கீஸிங்கர் சீனாவுக்கு வந்து அமெரிக்கா சோவியத் யூனியனுடன் போட்டி போடுவதற்கு சீனாவின் அதன் உதவியைப் பெற முயன்றார். 1971 இல் கீஸிங்கர் செய்ததை 2023 இல் ஜோ பைடன் செய்ய முயற்சிக்கிறார். (இதன் அர்த்தம் சீனாவை எதிர்ப்பதற்கு அமெரிக்கா இந்தியாவைப் பயன்படுத்துவது என்பதாகும் – மொழிபெயர்ப்பாளர்)

ஆனால் இந்தியா அமெரிக்காவின் கூட்டாளியாக வருவதற்கு இடையூறாக அது மிகப்பெரிய நாடாக இருக்கிறது என நான் நினைக்கிறேன். ஒரு பன்முக உலகில் சுதந்திரமாக வளர்வதையே இந்தியா விரும்பும். அது உலகிற்கும் ஆசியாவுக்கும் நல்லது. அதனால் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பல துறைகளில் ஒத்துழைப்பு நிலவினாலும், இரு நாடுகளுக்கும் இடையில் கூட்டு உருவாகும் நிலை எதனையும் நான் காணவில்லை.

---

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

போர்க்கப்பலில் அணு ஆயுதங்கள் இருப்பதை உறுதி செய்தார்.

**நேரடி ஆபத்து**

காங் சுன்-நம் வெளியிட்ட அறிக்கையில், "கடந்த 40 ஆண்டுகளில் முதன்முறையாக அணு ஆயுதங்கள் கொரிய தீபகற்பத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. மிகவும் ஆபத்தான நீர்ப்பகுதிக்குள் தங்கள் அணு ஆயுதங்கள் கொண்ட நீர்மூழ்கிப் போர்க்கப்பல் நுழைந்துள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இது எங்கள் நாட்டிற்கு நேரடியாக எழுந்துள்ள ஆபத்து என்றும் கருதுகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார். கொரியப் பகுதியில் பதற்றத்தை அதிகரிப்பதில் அமெரிக்கா மற்றும் தென் கொரியா ஆகிய இரு நாடுகளும் முனைப்பாக உள்ளன என்றும் வடகொரியா குற்றம்சாட்டியிருக்கிறது. தனது நாட்டிற்குக் கிழக்கில் உள்ள கடற்பகுதியில் இரண்டு ஏவுகணைகளை வீசி பரிசோதித்தும் இருக்கிறார்கள். இந்நிலையில் ஜப்பானையும் இணைத்துக் கொண்டு மூன்று நாட்கள் பங்கேற்கும் போர்ப்பயிற்சிகள் நடக்கவிருக்கின்றன. அணு ஆயுதப் போரை கொரியப் பகுதிக்குள் கொண்டு வரும் வகையில் அமெரிக்காவும், தென் கொரியாவும் அணு ஆயுத உடன்பாட்டில் கையெழுத்திட்டிருக்கின்றன என்று வடகொரியா குற்றம் சாட்டியிருக்கிறது.

# மலையகத் தமிழ் மக்கள் பற்றிய
## *அரசாங்கத்தின் நிலைப்பாடு மாற வேண்டும்!*



*“நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதற்காக இரண்டு நூற்றாண்டுகளாக உழைத்து வரும் மலையக தமிழ் மக்களை தொடர்ந்தும் தனியான இனக் குழுவாக அன்றி இலங்கை சமூகத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.*

*மலையக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார், பாராளுமன்ற உறுப்பினர் எம். ரமேஸ்வரன் ஆகியோருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.*

*1983 கலவரத்தின் பின்னரும் அந்த மக்கள் பிரிவினைவாத போக்குகளையோ அல்லது ஆயுதம் ஏந்திய பயங்கரவாத செயற்பாடுகளையோ கைக்கொள்ளவில்லை. மாறாக அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் மீதும் தெற்கு சமூகத்தின் மீதும் நம்பிக்கையுடன் செயற்பட்டதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.”*

(இந்தப் பத்திகள் அண்மையில் கொழும்பிலிருந்து வெளியாகும் ‘தமிழ் மிரர்’ பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியில் இடம் பெற்றவையாகும்)

இந்தச் செய்தியை வைத்துப் பார்க்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையகத் தமிழ் மக்களை ஒரு தனித் தேசிய இனமாகப் பார்க்கவில்லை எனத் தெரிகிறது. இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. ஏனெனில், பெரும்பாலான சிங்கள அரசியல்வாதிகள் இலங்கையின் வடக்கு கிழக்கில் பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழ் மக்களையே தேசிய இனமாகப் பார்ப்பதில்லை. அது மட்டுமின்றி, இலங்கையில் வாழ்கின்ற (சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்னர் வந்து குடியேறிய முஸ்லீம் மக்களையும் அவர்கள் ஒரு தேசிய இனமாகப் பார்ப்பதில்லை. (இதில் வெட்கக்கேடான இன்னொரு விடயம் என்னவென்றால், தாம் ஒரு தேசிய இனம், ஆண்ட இனம் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் இலங்கை தமிழ் தேசியவாதிகளும் முஸ்லீம் மக்களைத் தேசிய இனமாக ஏற்றுக் கொள்வதில்லை)

மலையகத் தமிழ் மக்கள் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் தமது பெருந்தோட்டங்களில் கூலி வேலை செய்வதற்காக பிரித்தானிய காலனித்துவவாதிகளால் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்கள்.

ஆரம்ப காலங்களில் அவர்களுக்கு அடிப்படைத் தேவைகள் உட்பட எந்தவிதமான உரிமைகளும் வழங்கப்படாமலே நீண்ட காலம் வைத்திருக்கப்பட்டிருந்தனர். அவர்களது அந்தஸ்து “கூலி அடிமைகள்” என்பதாகவே இருந்தது. இடதுசாரித் தொழிற்சங்கங்களே அவர்களுக்காகப் போராடி சில உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தனர். இந்த உண்மையை இன்று பலர் தமது அரசியல் இலாபம் கருதி மறைக்கப் பார்க்கின்றனர்.

பின்னர் ஒரு கட்டத்தில் சில இடதுசாரி ஆய்வாளர்கள் அவர்களை “காலனித்துவ தேசிய இனம்” வரையறை செய்தனர். ஆனால் மலையகத்தில் இருந்த சில இடதுசாரி புத்திஜீவிகள் மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்ற கருத்தை 1960 களிலேயே முன்வைக்கத் தொடங்கினர். (1965 இல் பதுளையிலிருந்து வெளிவந்த ‘பூங்குன்றம்’ என்ற சஞ்சிகையில் மு.நித்தியானந்தன் எழுதிய ஒரு கட்டுரையில் மலையக மக்கள் ஒரு தனியான தேசிய இனத்தவர் என எழுதியிருந்தார்)

மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இன்று முன்னைய காலங்கள் போல முற்றுமுழுதாக பெருந்தோட்டப் பொருளாதார முயற்சிகளில் மட்டும் ஈடுபட்டிருக்கவில்லை. வர்த்தகம், அரச உத்தியோகம், விவசாயம், சேவைத்துறைகள் என பல துறைகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் மலையகத்துக்கு வெளியே நாட்டின் பல பகுதிகளிலும் பரந்தும் வாழ்கின்றனர். ஆனாலும் அவர்களது அடிவேர் இன்னமும் மலையகத்தில்தான் இருக்கின்றது. இன்று அவர்கள் 200 வருட கடின போராட்டத்தின் ஊடாக ஒரு தேசிய இன அந்தஸ்தை அடைந்துள்ளார்கள். அதை அரசும் மற்றவர்களும் ஏற்று அவர்களை ஒரு தனித்துவமான தேசிய இனமாக அங்கீகரிப்பதுடன், மலையகப் பகுதிகளில் உள்ள விசேட சூழல்களுக்கு அமைவாக அவர்களுக்கான தனியான நிர்வாக அமைப்பு முறைகளையும் உருவாக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் இலங்கை அரசுகள் முன்னர் செய்த தவறுகளால் எழுந்த சூழலை மனதில் கொண்டு வெள்ளம் வருமுன்னர் அணை கட்டுவது தற்போதைய அரசாங்கத்தின் கடமையாகும்.

**முன்பக்கத்தொடர்ச்சி…**

தலைமையில்) என்ற நிலைப்பாட்டுக்கு விரோதமாக அமைந்ததால், கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் தீவிரமடைந்தன. அதனால் 1972 இல் கட்சி பிளவடைந்தது. அதன் காரணமாக சீன சார்பு அணி அமைப்பு ரீதியாகப் பலவீனமடைந்தது. இருந்தாலும் அந்த அணிக்கு வடக்கில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும், இளைஞர்கள் மத்தியிலும் கணிசமான செல்வாக்கு இருந்ததால் அக்கட்சி மற்றைய இடதுசாரிக் கட்சிகளை முந்திக்கொண்டு செயல்பட்டிருக்க முடியும்.

ஆனால் அக்கட்சியின் பழைய தலைமை தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையில் ஒரு சரியான நிலைப்பாட்டை எடுக்கத் தவறியதால் அக்கட்சியும் வடக்கு கிழக்கில் அரசியல் ரீதியாகப் பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அக்கட்சி அரசாங்கத்தில் இணைந்திருந்த மற்றைய இரு இடதுசாரிக் கட்சிகளும் சில சந்தர்ப்பங்களில் சிங்கள இனவாத சக்திகளுடன் இழுபட்டுச் சென்றது போல செயல்படாவிட்டாலும், தேசிய இனப் பிரச்சினையில் சரியான கண்ணோட்டத்தை எடுக்கத் தவறியிருந்தது.

சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, குறிப்பாக அதன் பொதுச்செயலாளர் சண்முகதாசன், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனத்துக்கான தகுதிகளைக் கொண்டிருக்கவில்லை என்ற தவறான கருத்தைக் கொண்டிருந்ததுடன், தமிழ் மக்களின் தேசிய – ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுவது இனவாதமாகிவிடும் என்ற நிலைப்பாட்டையும் கொண்டிருந்தார்.

இலங்கை மக்கள் அனைவரினதும் பிரதான எதிரி அந்நிய ஏகாதிபத்தியமே என்பதில் இலங்கையின் அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தனர். அதேநேரத்தில் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் மேலதிகமாக வேறு இரண்டு பிரச்சினைகளையும் கொண்டிருந்தார்கள். அதில் ஒன்று அவர்கள் சிங்களப் பேரினவாத அரசாங்கங்களால் எதிர்நோக்கிய தேசிய ஒடுக்குமுறை. மற்றையது, குறிப்பாக வட பகுதியில் நிலவிய மிகவும் மோசமான சாதிய ஒடுக்குமுறை.

இந்த இரண்டு பிரச்சினைகளிலும் சாதியப் பிரச்சினையை சரியாக இனங்கண்டு, அதற்கான போராட்டங்களை சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிகரமாக மேற்கொண்டது. அதேநேரத்தில் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை சரியாக இனங்கண்டு அதற்கான போராட்டங்களை முன்னெடுக்க அக்கட்சி தவறியது. கட்சியின் பழைய தலைமை தேசிய இனப் பிரச்சினை தீவிரமடைவதற்கு முன்னர் வடக்கு கிழக்கில் செய்தது போல தொழிற்சங்க வேலைகளையும், தீண்டாமைக்கு எதிரான பிரச்சாரத்தையும் மேற்கொண்டபடி தமிழ் மக்கள் மத்தியில் தனது வேலைகளை முன்னெடுக்கலாம் என தப்புக்கணக்குப் போட்டது. ஆனால் வரலாறு என்பது சில தனி மனிதர்களினதோ அல்லது அமைப்புகளினதோ விருப்பங்களின்படி செயல்படுவதில்லை. எனவே வரலாறு தமிழ் மக்களை எங்கோ கொண்டு சென்றுவிட, சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி பின்தங்கி நின்று தனிமைப்பட்டுப் போனது.

இத்தகைய அரசியல் சூழ்நிலைகளாலும், கட்சித் தலைமை பின்பற்றிய தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளாலும் கட்சிக்குள் பிளவுகள் தோன்றி நான்கு அணிகளாகக் கட்சி பிரிந்தது. இன்று அவற்றில் சில அணிகள் செயல் இழந்து விட்டன. குறிப்பாக சண்முகதாசன் தலைமையை நிராகரித்து 1972 இல் இலங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி என்ற புதிய கட்சி ஒன்றை உருவாக்கி தேசிய இனப் பிரச்சினையில் சரியான ஒரு நிலைப்பாட்டை எடுத்த அணியினரும் செயல் இழந்து போனவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். தாய்க் கட்சியில் இருந்து பிரிந்து சிறு குழுக்களாகச் செயல்படுபவர்களும் சர்வதேச அரசியல் நிலைமை, தேசிய அரசியல் நிலைமை, தேசிய இனப் பிரச்சினை என்பனவற்றில் தெளிவற்ற குழப்ப நிலையிலேயே இருக்கின்றனர்.

இன்னொரு விடயத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்வது அவசியம். 30 வருடங்களாக வடக்கு கிழக்கு மண்ணில் நிலவிய போர் காரணமாக அங்கு இடதுசாரிக் கட்சிகள் உட்பட எந்தவொரு அரசியல் கட்சிகளும், ஜனநாயக அமைப்புகளும், வெகுஜன அமைப்புகளும் செயல்படுவதற்கான இடைவெளியும் இருக்கவில்லை என்பது இன்னொரு முக்கியமான அம்சமாகும். குறிப்பாக புலிகள் இயக்கம் பின்பற்றிய வலதுசாரி – பாசிச செயல்பாடு காரணமாக, 30 வருடங்களாக தமது கட்சிகளுக்கு அடுத்தடுத்த தலைமுறைகளை உருவாக்கும் சந்தர்ப்பம் கட்சிகள் எதற்கும் இருக்கவில்லை. புலிகள் எல்லா அமைப்புகளையும் தடை செய்தது மட்டுமின்றி, பல அரசியல் மற்றும் வெகுஜனச் செயல்பாட்டாளர்களையும் கொலையும் செய்தனர். பல்லாயிரக்கணக்கானோரைப் பிடித்துத் தமது வதை முகாம்களில் வைத்து வருடக்கணக்கில் சித்திரவதையும் செய்தனர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ் மாவட்டச் செயலாளர் சி.விஜயானந்தனையும், நவ சமசமாஜக் கட்சியின் வட பிராந்தியச் செயலாளர் ஆ.க. அண்ணாமலையையும் கூட புலிகள் கொலை செய்தது அவர்களின் பாசிசச் செயல்பாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

பொதுவாக இன்றைய சர்வதேச மற்றும் தேசிய அரசியல் சூழல் காரணமாக இலங்கையின் பெரும்பாலான இடதுசாரிக் கட்சிகளும் குழுக்களும் வடக்கு கிழக்கில் முற்றாகச் செயலிழந்து விட்டன. யுத்தம் நடைபெற்ற 30 வருடங்களையும், யுத்தம் முடிவடைந்த பின்னரான 14 வருடங்களையும் கூட்டினால் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் வடக்கு கிழக்கில் இடதுசாரிகள் செயல்படவில்லை. வடக்கில் இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தவரை சில முதிய கட்சித் தோழர்களே எஞ்சியுள்ளனர். கிழக்கில் அதுவும் இல்லை எனலாம்.

அகில இலங்கை ரீதியாகப் பார்த்தாலும், இன்றைய சூழ்நிலையில் பழைய இடதுசாரிக் கட்சிகளான முன்னர் சோவியத் சார்பாக இருந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், பழம்பெரும் ரொட்ஸ்கியவாதக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியும் மட்டுமே எஞ்சி இருக்கின்றன. அவர்களுக்கு தெற்கில் சிங்கள மக்கள் மத்தியிலும் குறிப்பிடத்தக்க செல்வாக்கு இல்லை. முன்னர் போல பரவலாக கட்சிக் கிளைகளோ, தொழிற்சங்கங்களோ, வாலிபர் அமைப்புகளோ இல்லை. முன்னர் சிங்களத்தில் தினசரிப் பத்திரிகைகள் நடத்தியவர்கள் இப்பொழுது மாதத்தில் ஒரு பத்திரிகை கூட நடத்துவதில்லை. மார்க்சிய அரசியல் வகுப்புகளோ, தொழிற்சங்கப் போராட்டங்களோ, மக்கள் பிரச்சினைக்கான இயக்கங்களோ நடத்துவதில்லை. மற்றைய சில சிங்கள தேசியவாதக் கட்சிகளுடனான கூட்டுகளாலேயே அவர்கள் உயிர்

வாழ்கின்றனர்.

ஆனாலும் வரலாறு எப்பொழுதும் சமூக மாற்றத்துக்கான இயக்கங்களை வேண்டியே வந்திருக்கிறது. இனிமேலும் அதுதான் உண்மை. பெரும் நெருக்கடிகள் நிலவாத, ஒப்பீட்டு வகையில் ‘அமைதியான’ காலங்களில் முன்னர் இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் தோன்றி வளர்ந்திருக்க முடியுமானால் ஏன் இப்பொழுது மட்டும் முடியாது?

அதுவும், இலங்கையில் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்து, மக்களின் துன்பங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வரும் ஒரு சூழலில், சர்வதேச அரங்கில் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு முயற்சிகளும் அதற்கெதிரான பல்வேறு நாட்டு மக்களின் போராட்டங்களும் அதிகரித்து வரும் ஒரு சூழலில், இலங்கை மக்கள் மட்டும் அமைதியாக இருந்துவிட முடியுமா? “மரங்கள் ஓய்வை விரும்பினாலும், காற்று அதற்கு இடமளிக்கப் போவதில்லை” என்பது ஒரு சீனப் பழமொழி.

இலங்கையில் ஒரு பலமான இடதுசாரி இயக்கத்தைக் கட்டியமைத்து விடுவது சாத்தியமற்ற விடயமல்ல. அதற்கு முதலில் இடதுசாரிகள் தமது அமைப்புப் பலத்தை ஒன்று திரட்ட வேண்டும். அதற்கு முதலில் தேவை இடதுசாரிகளின் ஒற்றுமை. அதன் பின்னர் அதன் அடிப்படையில் சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசபக்த, ஜனநாயக சக்திகளின் ஒற்றுமை கட்டி எழுப்பப்பட வேண்டும். அந்த ஒற்றுமை வெறும் பாராளுமன்ற தேவைகளுக்காக சந்தர்ப்பவாத ரீதியில் அமைய முடியாது.

ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக மக்கள் பிரச்சினைகளின் அடிப்படையில் ஒரு வேலைத்திட்டம் அவசியம். அந்தத் திட்டம் வெறுமனே ஏகாதிபத்திய எதிர்ப்பையும், தேச பக்தியையும் கொண்டிருந்தால் மட்டும் போதாது. மக்கள் எதிர்நோக்கும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அது மட்டும் இருந்தாலும் போதாது. அந்த வேலைத்திட்டத்தில் தமிழ் பேசும் சிறுபான்மை இனங்கள் எதிர்நோக்கும் தேசிய இனப் பிரச்சினை நிச்சயம் ஒன்றாக இருக்க வேண்டும்.

இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதன் மூலமே இலங்கை பூராவும் மட்டுமின்றி, வடக்கு கிழக்கிலும் இடதுசாரி இயக்கத்துக்கு புத்துயிரூட்ட முடியும். இதைத் தவிர வேறு எந்தக் குறுக்கு வழிகளும் கிடையாது.

**8ம் பக்கத்தொடர்ச்சி...**

அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பாலஸ்தீனப் பகுதிகளை 1967 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து இஸ்ரேல் ஆக்கிரமித்து வருகிறது. அப்போதிருந்து எட்டு இலட்சம் பாலஸ்தீனர்கள் மோசமான சட்டங்கள் மூலம் சிறைகளில் அடைக்கப்பட்டனர். இவர்களில் 12 வயது சிறுவர்களும் அடங்குவர். தங்கள் கருத்துக்களைக் கூறுபவர்கள், கூட்டமாகக் கூடுபவர்கள், அங்கீகாரம் இல்லாத உரைகள் உள்ளிட்டவற்றிற்கு எதிராக இஸ்ரேல் சட்டங்கள் இருந்தன. அவை பாலஸ்தீன மக்களை ஒடுக்க நடைமுறைப்படுத்தப்பட்டன.

தனது அறிக்கையில், “ஆக்கிரமிப்பை மேற்கொண்டுள்ள நிர்வாகத்தின் கீழ் வசிப்பதால் பாலஸ்தீன மக்கள் பாதுகாப்பை இழந்து நிற்கிறார்கள். நான்கு சுவர்களுக்கு நடுவில், சோதனைச் சாவடிகளுக்குள், சுற்றி வளைக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களுக்குள் அப்பாவி மக்கள் தங்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். திறந்த வெளியில் கூட சிறைக்குள் இருக்கும் நிலைமைதான் அவர்களுக்கு இருக்கிறது” என்று ஆல்பனீஸ் கூறியுள்ளார்.

‘செயலில் காட்டுங்கள்’ இஸ்ரேலின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி தெரிவிப்பதாக இஸ்ரேலின் மிக நெருங்கிய நட்புநாடான அமெரிக்கா கூறியிருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை விமர்சித்துள்ளார். அதி தீவிர வலதுசாரிகள் தற்போது அமைச்சர்களாக இருப்பதை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதோடு நிறுத்திக் கொள்ளாமல் செயலில் காட்ட வேண்டும் என்று பாலஸ்தீன நிர்வாகம் அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளது.

**11ம் பக்கத்தொடர்ச்சி...**

திட்டமிட்ட வகையில் அரசின் ஆதரவோடு செய்யப்பட்டது. அந்த சட்ட விரோத சக்திகள் ஒடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இரண்டு இந்தியா அளவு**

இந்திய நிலப்பரப்பைப் போன்று இரண்டு மடங்கு பரப்பில் அமேசன் மழைக்காடுகள் அமைந்துள்ளன. இதில் மூன்றில் இரண்டு பகுதி பிரேசிலில் உள்ளது. எனவே, அமேசன் காடுகளின் பாதுகாப்பு என்று வருகையில் பிரேசிலின் அணுகுமுறைதான் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியும். போல்சானரோவின் ஆட்சிக் காலத்தில் அதற்கு முன்பு 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு காடுகள் அழிப்பு நடந்தன. அரசு யந்திரம் அழிப்புக்குத் துணையாக நின்றது. இடதுசாரி ஜனாதிபதி லூலா பொறுப்பேற்ற பிறகு, அழிப்புக்கு எதிராக அரசு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

பிரடெரிக் ஏங்கெல்ஸ், அடிக்கடி, உலகத்தின் முதல் மார்க்சிஸ்ட் என்று குறிப்பிடப்படுகிறார். அவரும் தனக்கேயுரிய இயல்பான தன்னடக்கத்துடன், இந்த அந்தஸ்தை பெருமிதத்துடன் ஏற்றுக்கொண்டிருந்திருக்கலாம். ஒருசமயம் ஏங்கெல்ஸ் கூறினார்: “மார்க்ஸ் என்ன சாதித்தாரோ அதனை, நான் எய்தியிருக்க முடியாது. மார்க்ஸ் நம்மையெல்லாம்விட உயரத்தில் நிற்கிறார், விஷயங்களை மேலும் கூர்மையாகப் பார்த்தார், நம்மையெல்லாம்விட அவர் அவற்றை மிகவும் விரிவான அளவிலும், வேகமாகவும் பார்க்கும் திறனைப் பெற்றிருந்தார். மார்க்ஸ் ஒரு மாமேதை. நாமெல்லாம் மிகச் சிறந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நிலையில் இருக்கிறவர்கள். அவரில்லையேல், இந்தக் கோட்பாடு இன்றுள்ள நிலையிலிருந்து வெகுதொலைவிலேயே இருந்திருக்கும். எனவேதான், இது மிகச் சரியானமுறையில் அவர் பெயரைத் தாங்கி இருக்கிறது.”

ஏங்கெல்ஸ் அவர்களால் மார்க்ஸ் இவ்வாறு பாராட்டப்பட்டிருந்தபோதிலும்கூட, ஏங்கெல்சின் மார்க்ஸ் குறித்த மதிப்பீடும், மார்க்சிய உலகக் கண்ணோட்டத்தின் சித்தாந்த அடித்தளங்களை வெளிக்கொணர்ந்தில் மார்க்சுக்கு சிறப்பு இடத்தைக் கொடுத்திருப்பதும், வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியதும் அவசியமாகும். மார்க்சும் ஏங்கெல்சும் கூட்டாகச் செயற்பட்டு, மார்க்சியத்தைக் கூட்டாகவே உருவாக்கினார்கள்.

***-சீத்தாராம் யெச்சூரி***

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# மொன்காடா இராணுவத் தாக்குதல்: கியூபப்புரட்சியின் முன்னோடி நடவடிக்கை!

கியூபாவின் சோசலிசப் புரட்சி ஃபிடல் கஸ்ட்ரோவின் தலைமையில் 1959 ஆம் ஆண்டு வெற்றியீட்டியது. அமெரிக்க கண்டத்திலுள்ள ஒரு சின்னஞ்சிறிய தீவில், அதுவும் உலகின் முதல்தர ஏகாதிபத்திய வல்லரசு நாடான அமெரிக்காவுக்கு மிக அருகில் உள்ள ஒரு நாட்டில் இப்புரட்சி வெற்றிபெற்றமை உலக அதிசயங்களில் ஒன்றெனலாம். அன்றிலிருந்து அமெரிக்கா வன்மத்துடன் கியூபா மீது பல்வேறு தடைகளை விதித்த போதும், அந்தப் புரட்சியின் நோக்கம் தோல்வியுறாமல் வீரம் செறிந்த கியூப மக்கள் அதைப் பாதுகாத்து வருகின்றனர்.



ஃபிடல் கஸ்ட்ரோவும் ஏனைய புரட்சியாளர்களும் மொன்காடா இரைணுவ முகாம் தாக்குதலின் பின்னர் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படுகின்றனர்.

கியூபப் புரட்சி 1959 இல் தனது இறுதி வெற்றியை ஈட்டினாலும், அதன் ஆரம்பகட்ட நடவடிக்கை அதற்கு 6 ஆண்டுகள் முன்பதாக 1953 இலேயே ஆரம்பித்துவிட்டது.

1953 யூலை 26 இல் ஃபிடல் கஸ்டரோவும் அவரது தோழர்களும் கியூபாவின் சந்தியாகோ டி கியூபா (Santiago de Cuba) என்ற இடத்தில் அமைந்திருந்த மொன்காடா இராணுவ நிலையம் (Moncada Army Garrion) மீது தாக்குதல் ஒன்றை நிகழ்த்தினர்.

சர்வாதிகாரி பட்டிஸ்டா (Fulgencio Batista) அமெரிக்காவின் ஆதரவுடன் கியூபாவின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய ஓராண்டு நிறைவு நிலையில் இந்தத் தாக்குதல் கியூபப் புரட்சியாளர்களினால் நடத்தப்பட்டது. 160 போராளிகள் பங்குபற்றிய இப்போராட்டத்தில் 60 வரையிலான போராளிகள் கொல்லப்பட்டனர். 56 பேர் உயிருடன் பிடிக்கப்பட்டனர். அவர்களில் சிலர் சர்வாதிகாரி பட்டிஸ்டாவின் கூலிப்படையினரால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர்.

ஃபிடல் கஸ்ட்ரோவும் வேறு சிலரும் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது அரசைக் கவிழ்க்க சதி செய்த குற்றச்சாட்டில் பட்டிஸ்டா அரசால் வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கின் போது ஃபிடல் நிகழ்த்திய உரைதான் சிறைச்சாலையிலிருந்து இரகசியமாகக் கடத்தி வரப்பட்டு, "வரலாறு என்னை விடுதலை செய்யும்" (History Will Absolve Me) என்ற தலைப்பில் பின்னர் புத்தகமாக வெளியிடப்பட்டு புகழ் பெற்றது. (பெரும்பாலும் இந்த நூல் உலகின் அனைத்து மொழிகளிலும் வெளியிடப்பட்டு கோடிக்கணக்கான பிரதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. தமிழிலும் பல பதிப்புகள் வந்துள்ளன)

இந்தச் சம்பவத்தின் பின்னர் புரட்சியாளர்களை அடக்குவதாகக் கூறி பட்டிஸ்டா அரசு பல நடவடிக்கைகளை எடுத்த போதும், அவனது அரசுக்கெதிரான எதிர்ப்புணர்வு மக்கள் மத்தியில் நாளுக்குநாள் அதிகரித்து வந்தது. அதன் காரணமாக காஸ்ட்ரோவையும் அவரது தோழர்களையும் 1955 மே 15 ஆம் திகதி சிறையிலிருந்து விடுவிக்க வேண்டிய நிலை பட்டிஸ்டா அரசுக்கு ஏற்பட்டது.

சிறைக்கு வெளியே வந்த ஃபிடலும் அவரது தோழர்களும் ஓய்ந்திருந்துவிடாது மக்களை அணிதிரட்டி சர்வாதிகாரி பட்டிஸ்டாவுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தனர். அதன் காரணமாக பட்டிஸ்டா ஆட்சியில் தாக்குப்பிடிக்க முடியாது 1959 ஜனவரி 1 ஆம் திகதி நாட்டை விட்டுத் தப்பியோடினான். அவன் தப்பியோடிய ஒரு வாரத்தில் ஃபிடலும் அவரது தோழர்களும் தலைநகர் ஹவானாவுக்கு வந்து ஆட்சியதிகாரத்தைத் தமது கைகளில் எடுத்து கியூபாவில் சோசலிச அரசொன்றை நிறுவிக் கொண்டனர்.

1953 இல் நடத்தப்பட்ட மொன்காடா இராணுவ முகாம் மீதான தாக்குதல் இராணுவ ரீதியாகத் தோல்வியுற்றாலும், அந்தத் தாக்குதல் நிகழ்வே கியூபப் புரட்சிக்கான அரசியல் உந்துணர்வை வழங்கியது. அதனால்தான் அதன் 70 ஆவது ஆண்டு நிறைவை கியூப மக்கள் அண்மையில் வெகு விமரிசையாகக் கொண்டாடினர்.

புரட்சிக்கு வித்திட்ட ஃபிடல் காஸ்ட்ரோவின் கைகளுக்கு ஆட்சி மாறிய பின்னர், கியூபா மக்களின் வறுமைகள் ஒழிந்து சிறந்த நாடாகவும், உலகிலேயே சிறந்த மருத்துவ சேவை வழங்கும் நாடாகவும் வளர்ந்துள்ளது. ஃபிடல் காஸ்ட்ரோவைத் தீர்த்துக் கட்டுவதற்காக 638 சதித்திட்டங்களை அமெரிக்கா தீட்டியது அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன.